இனி இது ரகசியம் அல்ல!

சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் விடயத்தில் அவர் கடத்தப்படவில்லை என்பதைத் திரும்பத் திரும்ப அடித்துக் கூறுகின்றது இலங்கை அரசுத் தரப்பு.

ஜனாதிபதியிலிருந்து ஆளும் கட்சி முக்கியஸ்தர் பக்கம் 02

பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 04 வெள்ளிக்கிழமை 20.12.2019 கதிர் 45

# ஜெனிவா தீர்மானத்தை ஏற்காது எங்கள் அரசு!



## சர்வதேச ஊடகங்கள் முன்னிலையில் கோட்டா நேற்று திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 20

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையினால் இலங்கை தொடர்பில் எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் நாட்டுக்கு ஆபத்தாக அமையும் என்பதனால் எமது அரசால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

– இவ்வாறு நேற்றுச் சர்வதேச ஊடகங்கள் முன்னிலையில் திட்டவட்டமாக அறிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. பக்கம் 03

## மார்ச் 3ஆம் திகதிக்கு பின் நாடாளுமன்றம் கலைப்பு!


ஏப்ரலில் தேர்தல் என்கிறார் கோட்டா

கொழும்பு, டிசெ.20

எதிர்வரும் மார்ச் 03ஆம் திகதிக்கு பின்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு ஏப்ரலில் பொதுத் தேர்தல் பக்கம் 03

## அரிசி விலையை நிர்ணயித்து வர்த்தமானியில் அறிவித்தல்!

கூடிய விலைக்கு விற்றால் சட்டம் பாயும்



கொழும்பு, டிசெ.21

சம்பா மற்றும் நாட்டு அரிசி ஒரு கிலோ கிராமின் அதிகபட்ச சில்லறை விலை ரூபா 98.00 ஆக நிர்ணயிக்கப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்று இரவு வெளியாகவிருந்தது. பக்கம் 03

## வேலணை பிரதேச சபையில் களேபரம்

யாழ்ப்பாணம், டிசெ.20

வேலணை பிரதேச சபையில் நேற்று ஏற்பட்ட குழப்பம் கைகலப்பில் முடிந்துள்ளது. இதையடுத்து, இரண்டு உறுப்பினர்கள் தாம் தாக்கப்பட்டனர் எனத் தெரிவித்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பிரதேசசபை உறுப்பினர் ஒருவரும், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த பிரதேசசபைத் தவிசாளருமே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

புதிய அரசு ஒதுக்கீடு செய்த, கிராம சேவகர் பிரிவுகளுக்கான 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு விவகாரத்தால் இந்தச் சர்ச்சை ஏற்பட்டது.

வேலணை பிரதேசசபை உப தவிசாளர் (ஈ.பி.டி.பி), பக்கம் 03

## மிலேனியம் சவால் உடன்பாட்டை இடைநிறுத்துவதற்கு அரசு முடிவு!

கொழும்பு, டிசெ. 20

அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒப்பந்தத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் அது தொடர்பில் ஆராய்வதற்காக நான்கு பேர் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பக்கம் 03

## முன் பிணை கோரி ராஜித நேற்று மனு

கொழும்பு, டிசெ. 20

தம்மைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் முன் பிணை கோரும் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். பக்கம் 02

## ராஜிதவும் அகப்படுவார்



கொழும்பு, டிசெ. 20

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சட்டத்தின் பிடியில் அகப்படவுள்ளார் என இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். பக்கம் 03

## நத்தார் ஆராதனைகளின் போது தேவாலயங்களுக்குப் பாதுகாப்பு

கர்தினாலின் கோரிக்கையை ஏற்றது அரசு



கொழும்பு,டிசெ.21

வரும் புதன்கிழமை நத்தார் தினத்தில் தெய்வ வழிபாடுகள் நடைபெறும் சகல தேவாலயங்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பக்கம் 02

## யாழ். மணல் கொள்ளை விவகாரம்; மாநகர சபை உறுப்பினர் தொடர்புபடவில்லையாம்

பதிலாக ஒருவரை முற்படுத்தினர் பொலிஸார்

யாழ்ப்பாணம், டிசெ. 20

அரியாலை ஈச்சங்காடு என்ற இடத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மற்றும் கடத்தலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் முற்படுத்தப்பட்ட நால்வரில் மூவருக்கு தலா ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் பக்கம் 03

## ஆவரங்கால் வாள்வெட்டில் இளைஞன் நேற்று படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

ஆவரங்கால் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். பக்கம் 03

## யாரைத் திருப்திப்படுத்த முனைகிறார் சம்பந்தன்?



சிறிகாந்தா கேள்வி

யாழ்ப்பாணம், டிசெ. 20

தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டமை நல்ல விடயமாக இருக்கலாம் எனத் தமிழ்த் தேசியக் கூட் பக்கம் 03

## சம்பிக்கவின் கைதுக்கு சபாநாயகர் அதிருப்தி

கொழும்பு, டிசெ.20

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் கைது கவலையளிப்பதாக சபாநாயகர் அலுவல பக்கம் 03

## யாழ் பல்கலைக்கழக மாணவி நேற்று மாலை சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் முதலாம் வருடத்தில் பயிலும் –கிளிநொச்சி பரந்தனைச் சேர்ந்த மாணவி ஒருவர், மல்லாகம் பகுதியில் தாம் வசித்து வந்த வாடகை வீட்டில் நேற்று மாலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பக்கம் 02

காலைக்கதிர் Kalaikkathir



# கொழும்புக்கு நேற்று வந்தார் இந்தியக் கடற்படைத் தளபதி



இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் கரம்பீர் சிங் நான்கு நாள்கள் பயணமாக இலங்கையை வந்தடைந்தார். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு கடல்சார் உறவுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்தப் பயணம் இடம்பெறுகிறது.

இந்தியக் கடற்படைத் தளபதி, கொழும்பில் கடற்படைத் தளபதி மற்றும் ஏனைய படைத் தளபதிகள், அரச அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார். அத்துடன் எதிர்வரும் 22 ஆம் திகதி திருகோணமலை கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் மிட்சிப்மன் பயிற்சியை முடித்து வெளியேறும் அணிவகுப்பு நிகழ்விலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# மைத்திரியின் செயலக பிரதானிக்கு 20 வருடங்கள் சிறைத் தண்டனை!

கொழும்பு,டிசெ.20

இலஞ்சம் பெற்றமைக்காக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அலுவலகப் பிரதானி கலாநிதி ஐ.எச்.கே. மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பியதாச திஸாநாயக்க ஆகியோரை கொழும்பு நிரந்தர நீதாய மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் (ட்ரயல் அட் பார்) நேற்றுக் குற்றவாளிகளாக அறிவித்தது.

சம்பத் அபேகோன், சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாமினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட சாட்சி விசாரணைகள் மற்றும் வாய்வழி சமர்ப்பிப்புகளின் பின்னர் வழக்கு விசாரணையைக் கடந்த 4 ஆம் திகதி நிறைவு செய்த மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் வழக்கின் தீர்ப்பை நேற்று அறிவிப்பதாக தெரிவித்திருந்தது. அதன்படி வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

குற்றம் நிரூபிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் அலுவலக பிரதானி கலாநிதி ஐ.எச்.கே மஹாநாமவிற்கு 20 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் 65 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், லஞ்சமாகப் பெற்ற 2 கோடி ரூபாவையும் அபராதப்பணமாகச் செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல், இந்த வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான அரச மரக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பியதாச திஸாநாயக்கவுக்கு 12 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் 55 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்திய நிறுவனம் ஒன்றிடமிருந்து இரண்டு கோடி ரூபா லஞ்சம் பெற்ற குற்றத்துக்காக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி கலாநிதி ஐ.எம்.கே. மஹாநாம மற்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் பி.திசாநாயக்க ஆகியோருக்கு இவ்வாறு சிறைத்தண்டனை வழக்கப்பட்டுள்ளது.(ஐ)

# தென்மராட்சி கம்பன் விழாவில் நாளை...

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் கம்பன் விழா நாளை சனிக்கிழமையும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமையும் சாவகச்சேரி, சங்கத்தானை தமிழ்க் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

நாளை மாலை 5 மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் முதல் நாள் நிகழ்வில் கம்பவாரிதி இ. ஜெயராஜை நடுவராகக் கொண்டு 'இராமனின் வெற்றிக்குப்பெரிதும் துணை புரிந்த உடன் பிறவாத் தம்பி' என்ற தலைப்பில் பட்டிமண்டபம் நடைபெறும்.

'குகனே' என இரா.செல்வவடிவேல் ,த.கருணாகரன் ஆகியோரும் 'சுக்ரீவனே' என க.குமாரதாசன், பரா.ரதீஸ் ஆகியோரும், 'வீடணனே' எனப் பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தன் , அ.வாசுதேவா ஆகியோரும் வாதிடுவர்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை நிகழ்ச்சியில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் 'வாழ்வியல் கம்பன்' என்ற தலைப்பில் கருத்தரங்கும்–

மாலை நிகழ்வில் கலாநிதி ஆறு திருமுருகனுக்கான விருதும், 'படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள்' என்ற நிகழ்வும் இடம்பெறும்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியிலிருந்து நேற்று மாலையே இவர் யாழ்ப்பாணத்துக்கு வந்ததார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் கல்வி பயிலும் இவரது சகோதரியும் இவர் கூடவே வசித்து வந்தார் எனவும் அவர் நேற்றைய தினம் வீட்டில் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மாலைவேளைவீட்டின்உரிமையாளர் வீட்டுக்கு ஏன் வெளிச்சம் போடவில்லை எனக் கூறிக் கொண்டு வீட்டுக்குள் சென்று பார்த்தபோதே மாணவி தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை தெல்லிப்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரவைகளை வைத்திருந்தார் என்று ஒருவர் வவுனியாவில் கைதானார்

வவுனியா – ஓமந்தை, கொந்தக் காரங்குளம் பகுதியில் துப்பாக்கிரவையுடன் சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

இரகசியத் தகவலின் அடிப்படையில் ஓமந்தை – கொந்தக் காரங்குளம் பகுதியிலுள்ள வீட்டில் நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் வவுனியா பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது வீட்டுக்கு முன்பாகவுள்ள பூச்சாடியிலிருந்து ரி–56 துப்பாக்கி ரவைகள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 47 வயதுடைய ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் எனப் பொலிஸார் மேலும் கூறினர்.(ஐ)

## முன் பிணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் 10ஆம் திகதி,ராஜித சேனாரத்ன ஒழுங்கு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்பாக இரண்டு பேர் தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

அந்த விவகாரம் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வரும், குற்ற விசாரணைத் திணைக்களம், ராஜித சேனாரத்னவின் செய்தியாளர் சந்திப்பில் வெள்ளை வான் கடத்தல்கள் குறித்த தகவல்களை வெளியிட்ட இருவரையும் கைது செய்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவையும் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையிலேயே தம்மைக் கைது செய்வதற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிடுமாறு கோரி, கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் ராஜித சேனாரத்ன முன் பிணை மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தின் பிடியில் சம்பிக்க ரணவக்க அகப்பட்டுள்ளார் என்றும், விரைவில் ராஜித சேனாரத்னவும் அகப்படுவார் என்றும் இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நத்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள கர்தினால் இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பாதுகாப்பு தொடர்பில் கடந்த காலத்தில் பல்வேறு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும், இதனால், மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இவ்வாறு மேலதிக பாதுகாப்பைத் தாம் கோரினார் எனவும் கர்தினால் குறிப்பிட்டுள்ளார்.

தாம் கோரியுள்ள பாதுகாப்பை வழங்குவதற்கு அரசாங்கம் உடன்பட்டிருப்பதாகவும் கர்தினால் அறிவித்துள்ளார்.

ஏதும் தாக்குதல்கள் மீண்டும் மேற்கொள்ளப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் இருக்கலாம் என்ற கருதுகோளின் அடிப்படையில் மேலதிக பாதுகாப்பை வழங்குமாறு அரசாங்கத்திடமும், பாதுகாப்பு அமைச்சிடமும் இந்த வேண்டுகோளைத் தாம் விடுத்தார் எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் கூறியுள்ளார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஒவ்வொருவர் வரை இப்படித்தான் கூறுகின்றார்கள். அது உண்மையும் கூட.

அந்தப் பெண் ஊழியர் – தமிழர் – வெள்ளை வானிலோ அல்லது வாகனத்திலோ கடத்தப்பபட்டார் என்று கூறப்படுவது உண்மைக்கு மாறானது என்பது பெரும்பாலும் தெளிவாகி விட்டது.

அதனைத் திரும்பத் திரும்பக் கூறி பிரசார லாபம் ஈட்டும் இலங்கை அரசுத் தரப்பும், தென்னிலங்கை ஊடகங்களும் அதற்கு அப்பால் நடந்த உண்மைகளை மூடி மறைக்கின்றன.

இதேவேளை நடைபெற்ற புலனாய்வு விசாரணைகள், நீதிமன்ற விசாரணைகளில் அதிர்ச்சி தரும் பல உண்மைகள் வெளிவந்துள்ளன. அவை வெள்ளை வானில் அந்த ஊழியர் கடத்தப்பட்டார் என்று கூறப்படும் சம்பவத்தை விட மோசமான பல பக்கங்களையும் கொண்டுள்ளன.

ஆனால், அவை பற்றி மூச்சு விடுவதற்கு தென்னிலங்கை ஊடகங்கள் தயாரில்லை. மறுபுறம் அதற்குப் பாதுகாப்பும் இல்லை.

ஒரு நாட்டின் தூதரகமே முழு அளவில் பின்னணியில் இருந்த போதும், அந்தத் தூதரக ஊழியரைப் பாதுகாத்துக் காப்பாற்றுவது சிக்கலாக இருக்கும் போது, இது போன்ற விடயங்களை அம்பலப்படுத்த முயலும் ஊடகவியலாளர் கதி எப்படி இருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்வார்கள் என நினைக்கின்றேன்.

எனவே வாசகர்களின் தகவலுக்காக சில விடயங்களை மட்டும் மேலோட்டமாகப் பரிமாறிக் கொள்வதோடு விடயத்தைச் சுருக்கிக் கொள்கிறேன்.

அந்தப் பெண் ஊழியர் முதலில் கூறியவை போல அவர் யாராலும் கடத்தப்படவில்லை.

ஆனால் தெரிந்த ஒரு பெண்மணி மூலம் ஒரு தனியான கட்டடத் தொகுதியில் உள்ள ஒரு வீட்டுக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணுக்கு உதவும் நோக்குடன் அங்கு சென்ற அந்தத் தூதரக ஊழியருக்கு அது தனக்கு வைக்கப்பட்ட பொறி என்பது தெரிந்திருக்கவில்லை.

அந்த வீட்டுக்குள் சென்ற பின்னர் தான் பொறி வைத்துக் காத்திருந்து தன்னை மடக்கியிருக்கின்றார்கள் என்பது அவருக்குப் புரிய ஆரம்பித்திருக்கின்றது. அங்கு வைத்துத்தான் அந்தப் பெண் ஊழியர் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார். அவரது பெண் உறுப்பு வரை பாலியல் தொல்லை நீண்டிருக்கின்றது. மிரட்டி விடயங்கள் கறக்கப்பட்டிருக்கின்றன. தொலைபேசியில் இருந்த விடயங்களும் உருவப்பட்டிருக்கின்றன.

அச்சுறுத்தப்பட்டமையாலும், சம்பந்தப்பட்ட வீட்டில் தன்னை மாட்டிவிட்ட தரப்பைக் காட்டிக் கொடுக்க முடியாது என்ற அச்சத்தாலுமே இவ்விடயங்கள் எல்லாம் வெள்ளைவானில் கடத்தப்பட்டு அதற்குள் வைத்துத் தன்னிடமிருந்த உருவப்பட்டன என்ற 'கதையை' அந்தப் பெண்மணி முதலில் கூறினார் என்று தெரிகின்றது.

இந்த முரண்பாட்டைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு, தென்னிலங்கை மற்றைய விடயங்களை மூடி மறைத்தபடி, வாகனத்தில் அந்தப் பெண் கடத்தப்பட்டமை நடக்கவே இல்லை என்று பெரும் பிரசாரம் செய்கின்றது.

வானில் அந்தப் பெண் கடத்தப்படவில்லை. பொறி வைத்துக் அவர் மடக்கப்பட்டார். ஆனால் மற்றைய அடாவடித்தனங்கள், அத்துமீறல்கள் எல்லாம் மோசமாக அரங் கேறித்தான் இருக்கின்றன. அவை மூடி மறைக்கப்படுவது தான் வேதனைக்குரியது.

சம்பந்தப்பட்ட பெண் ஊழியர் சுவிஸ் தூதரகத்தின் விஸா பிரிவில் வேலை செய்பவர். அத்தகைய பதவியில் இருப்பவர் தூதரகத்தின் விஸா பெறுவதற்கு விண்ணப்பிக்கும் ஆள்களுக்கு அது தொடர்பான உதவி, ஒத்தாசை வழங்கும் வேலைகளுக்குப் போகக் கூடாது. அது அவர்கள் பணிக்கு ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

விஸாவுக்கு விண்ணப்பிக்கும் ஒரு வெளியாருக்கு அந்த விண்ணப்பத்தை நிரப்புவதற்கு உதவுதல் என்ற நோக்கத்துக்காக – அழைப்புக்காகவே – அந்த வீட்டுக்கு அவர் சென்றிருக்கின்றார். அந்த உதவிக்கு ஏதும் கட்டணம், அன்பளிப்பு பெறுவது அவர் நோக்கமாக இருக்கலாம். எனினும் அது பற்றி எதுவும் தெரியவில்லை.

ஆனால், அங்கு இப்படி விபரீதம் நடைபெற்ற பின்னர், அது குறித்து தூதரகத்துக்கு முறைப்பாடு செய்ய வேண்டியது அவருக்குக் கட்டாயமானதாகி விட்டது. ஆனால் அந்த வீட்டில் இப்படி நடந்து விட்டது என்று தூதரகத்திடம் கூறினால் ஏன் அந்த வீட்டுக்குள் போனீர்கள் என்று தூதரகத்தின் கேள்வி எழும், விஸா விண்ணப்பத்தை நிரப்புவதற்கு உதவப் போனேன் என்றால் அத்தோடு தூதரகம் தன்னை வேலையிலிருந்து தூக்கி விடும் என்பது அந்த ஊழியருக்கு மூளையில் உறைத்திருக்கும், அதனால் ஆரம்பத்தில் அப்படி வீடு ஒன்றில் பொறி வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டேன் என்று கூறாமல், வெள்ளை வானில் கடத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டேன், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டேன் என்று அவர் தூதரகத்தின் மேலதிகாரிகளிடம் கூறியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்த வேலையைச் செய்த சூத்திரதாரிகளும், இப்படிப் பணத்துக்கு விஸா பெறும் உதவிகளைச் செய்யும் நடவடிக்கைக்குள் அந்த ஊழியரை வீழ்த்தி, அப்போது இத்தகைய அத்து மீறல் விசாரணையை நடத்தினால் அந்த ஊழியரும் விடயங்களை எல்லாம் கக்கிய பின்னரும், 'திருடனுக்குத் தேள் கொட்டியது போல' சத்தமிடாமல் – வெளியே சொல்லாமல் – அடங்கி விடுவார் என எதிர்பார்த்திருக்கலாம்.

ஆனால், விவகாரம் விபரீமாகி விடயங்கள் மலிந்து விட்டன. பொதுச் சந்தைக்கு – சந்திக்கு – அவை வந்து விட்டன.

'கடத்தல்' என்ற பேச்சு, நாடகம் என இலங்கைத் தரப்பு திரும்பத் திரும்பக் கூறிப் பிரசாரப்படுத்தினாலும், அதற்குள் பின்னால் புதையுண்டு கிடக்கும் மற்றைய விடயங்கள் இராஜதந்திரப் புயலைக் கிளப்பாமல் விடாது என்பதுதான் எனது கணிப்பீடு.

–மின்னல்–

## ஜெனிவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த ஜனாதிபதி, ஓர் அரசால் கைச்சாத்திடப்பட்ட வர்த்தக உடன்படிக்கையை அடுத்துவரும் அரசு இரத்துச் செய்வது நடைமுறை சாத்தியமற்றதாகும் எனக் குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள அனைத்துத் துறைமுகங்களும் இலங்கை அரசின் கீழ் செயற்படவேண்டும் என்பதே எனது அரசின் நிலைப்பாடாகும். அனைத்துத்துறைமுகங்களிலும் நாட்டிலுள்ள பொதுவான சட்டமே நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். வர்த்தகச் செயற்பாடுகள் இடம்பெறும் அதே வேளை, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் அடிப்படை தேவையாகும் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

19ஆவது அரசமைப்பு திருத்தம் பெரும் பிழையாகும் எனவும் நாட்டின் எதிர்காலப் பயணத்துக்கு அதுபெருந்தடையாகும் என்பதையும் ஜனாதிபதி கோட்டாபய சுட்டிக்காட்டினார். (ஐ)

## அரிசி விலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரிசியைக் கூடிய விலைக்கு விற்பனை செய்யும் வியாபார நிறுவனங்களை சுற்றிவளைக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்கிரமரத்ன சகல உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளார்.

சில அரிசி வியாபாரிகள் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் எனர் தகவல்கள் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஆவரங்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்தவர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தப் பகுதியில் பொதுமக்கள் கூடியதால் அங்கு சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-07)

## சம்பிக்கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கைதானது நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைது செய்யும்போது பின்பற்றப்படவேண்டிய பாராம்பரியங்களையும், சிறப்புரிமைகளையும் மீறியுள்ளதாகவும் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவை கைது செய்வதற்கு முன்பதாக அது குறித்து சபாநாயகருக்கு எழுத்துமூலம் அறிவித்திருக்க வேண்டும். ஆனால் சம்பிக்க ரணவக்கவின் இல்லத்துக்குள் நுழைந்த பின்னரே பிரதிச் சபாநாயகருக்கு இவ்விடயம் தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்டதாகவும் சாபாநயாகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

சமல் ராஜபக்ஷ சபாநாயகராகவிருந்த காலத்தில் பாராம்பரியங்கள் மற்றும் சம்பிரதாயங்கள் முறைப்படி பின்பற்றப்பட்டன எனவும், அதனைத் தானும் பின்பற்றி வருகிறார் எனவும் சபாநாயகர் கருஜயசூரிய இதன்போது மேலும் கூறினார். (ஐ)

## மார்ச் 3ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று நண்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

உலகின் முதற்தர வெளிநாட்டு ஊடக நிறுவனங்களில் உள்நாட்டில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

என்னை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்த மக்களின் எதிர்பார்ப்புகள் உயர்ந்த பட்சமாக நிறைவேற்றப்படும். மக்கள் இரண்டு முதன்மை நோக்கங்களுடனேயே எனக்கு வாக்களித்தனர். தேசிய பாதுகாப்பை உறுதி செய்வது அவற்றுள் முதன்மையானதாகும். மற்றையது துரித பொருளாதார அபிவிருத்தியினூடாகச் சிறந்தொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதாகும். இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவதே எனது எதிர்பார்ப்பாகும் என ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகப் பெண் அலுவலர் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இதன்போது பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் அலுவலர் சுவிஸ் தூதரகத்தில் பணியாற்றுவதனால் சுவிஸ் தூதுவர் அவர் சார்பாக செயற்பட்டதில் தவறில்லை என்பதே தனது கருத்தாகும் என தெரிவித்த ஜனாதிபதி, அந்தப் பெண்ணால் குற்றஞ்சாட்டப்பட்ட வகையில் கடத்தல் சம்பவமொன்று ஒருபோதும் இடம்பெற்றிருக்கவில்லை என்பது மறுக்க முடியாத தொழிநுட்ப சாட்சியங்களினூடாக உறுதிசெய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டு ஒரு கட்டுக்கதையாகும். இதனால் இரு நாட்டு அரசுகளும் அதில் தலையிடாது முறையான சட்ட நடவடிக்கைகளுக்கு இடமளிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அரசைப் பொறுப்பேற்ற கடந்த ஒரு மாத காலத்துக்குள் அரசின் செயற்பணிகள் தொடர்பில் வினவப்பட்ட வினாக்களுக்கு பதிலளித்த ஜனாதிபதி, மக்களிடம் முன்வைக்கப்பட்ட கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமையளித்து செயற்பட்டு வருகிறார் எனக் கூறினார்.

சிக்கலான வரி முறைமையினை நீக்கி அதனை எளிதாக புரிந்துகொள்ளக்கூடிய வகையில் மாற்றுதல் முதலாவது நடவடிக்கையாகும். உற்பத்தியின்போது செலுத்தப்படும் வரி நீக்கப்பட்டமை போன்ற சலுகைகள் வர்த்தக சமூகத்திற்கு பலமாகும். இந்தச் சலுகைகள் மக்களைச் சென்றடைவதும் உறுதிப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

ஒரு லட்சம் வேலைவாய்ப்புகள் வழங்கும் திட்டம் தொடர்பில் குறிப்பிட்ட ஜனாதிபதி, வறுமை நிலையிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் குறைந்தது ஒரு நபருக்காவது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதே அதன் நோக்கமாகும் எனத் தெரிவித்தார்.

இதற்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்கும்போது நிபுணத்துவமும் சிறப்பு தொழில் தகைமைகளும் அற்றவர்களுக்கே முன்னுரிமையளிக்கப்படும். வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு நிலையான வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதே இதன் அடிப்படை நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ராஜிதவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போதைய அரசு யாரையும் பழி வாங்கும் நோக்குடையது அல்ல. சட்டத்தையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்கக்கூடிய சமூகம் ஒன்றைகட்டியெழுப்பும் நோக்கில் அரசு செயற்படுகிறது. சுதந்திரமான இலங்கையை உருவாக்குதே இன்றைய எமது தேவையாகும்.

ஜனநாயகம் என்பது மிகவும் பெறுமதியான ஒன்றாகும். நீங்கள் உறுதிப்படுத்திய அந்த ஜனநாயகத்தையே, இந்த அரசை அமைப்பதற்கு 53 சதவீதமான வாக்குகளை அளித்து பாரிய வெற்றியை மக்கள் வழங்கியுள்ளனர். இதுவே, ஜனநாயகத்தின் பலமாகும். எமது ஆயுதம் ஜனநாயகமே ஆகும்-என்றார். (ஐ)

## வேலணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசசபை வாகனத்தில் கிராமங்களிற்கு சென்று, மேற்படி நிதி ஊடான அபிவிருத்திப் பணியை, தமது அபிவிருத்திப் பணியைப் போல காட்டும் செயற்பாட்டில் ஈடுபட்டார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குற்றம்சாட்டினர்.

மேற்படி நிதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டப் பணிகளை கிராம சேவையாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பொதுஅமைப்புக்களை கொண்ட குழுவின் மூலம் அடையாளம் காண வேண்டும் மென்பதையும் வலியுறுத்தினர்.

இது சபையில் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் சபை அல்லோலகல்லோலப்பட்டது. இருதரப்பும் மோசமான வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டன.

சபை அமர்வின் பின்னரும் இருதரப்பும் சச்சரவில் ஈடுபட்டனர். மோதல் உச்சமடைந்து சபா மண்டபத்திற்கு வெளியில் இரு தரப்பினதும் சில உறுப்பினர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர் நாவலன் முகத்தில் தாம் காயமடைந்தார் எனத் தெரிவித்துள்ளார். தன் மீது சபை தவிசாளர் போல்சிவராசாவே தாக்குதல் நடத்தினார் என ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்துள்ளார். பின்னர் ஊர்காவற்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, தான் தாக்கப்பட்டார் எனத் தெரிவித்து, தவிசாளர் போல் சிவராசாவும் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ)

## மிலேனியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன இதனைக் கூறினார்.

மிலேனியம் சவால் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்வதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானம் பிரிவின் கலாநிதி லலித் குணருவன், வாஸ்து விஞ்ஞான நிபுணர் நாலக்க ஜயவீர, போக்குவரத்து அமைச்சின் முன்னாள் செயலாளர் டி.எஸ். ஜயவீர மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயவர்தன ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மாநகர சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் விசுவலிங்கம் கிருபாகரன் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்திருந்த நிலையில் அவரது இடத்துக்கு நேற்று செல்வராஜா சுரேந்திரன் என்பவர் முற்படுத்தப்பட்டார். அவரைக் காணி உரிமையாளர் எனப் பொலிஸார் குறிப்பிடப்பட்டு அவருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யதனர். தாம் சுத்த வாளி எனக் கூறிய அவர், தனது காணியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுவதாக முறைப்பாடு வழங்கியபோதும் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறினர் என்று தெரிவித்தார்.

அதனால் அவரைப் பிணையில் விடுவித்த நீதிவான், வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

யாழ்ப்பாணம் அரியாலையில் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டார் என யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் விசுவலிங்கம் கிருபாகரன் கைது செய்யப்பட்டார் என்று நேற்று முன் தினம் மாலை பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

நேற்று முன்தினம் காலை சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்ற இடத்தில் பைக்கோ மற்றும் உழவு இயந்திரத்தைக் கைப்பற்றிய பொலிஸார், மாலை யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரை தடுத்துவைத்திருந்தனர். எனினும் அவர் நேற்று முன் தினம் மாலை விடுவிக்கப்பட்டிருந்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான விசுவலிங்கம் கிருபாகரனை விடுவிக்க அவரது கட்சியின் தலைமை முயற்சிக்காத நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வரும் ஈ.பி.டி.பியினரும் முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டும் எழுந்திருந்தது.

இந்த நிலையில் அவரது இடத்துக்கு செல்வராஜா சுரேந்திரன் என்பவர் காணி உரிமையாளர் எனக் குறிப்பிட்டு நீதிமன்றில் பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வுக்கும் கடத்தலுக்கும் உடந்தையாகவிருந்தார் என்ற குற்றச்சாட்டுப் பத்திரம் பொலிஸாரால் முன்வைக்கப்பட்டது.

சந்தேகநபர் தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துத் தாம் சுத்த வாளி என்று கூறினார். அவர் சார்பில் சட்டத்தரணி வி.திருக்குமரன் முன்னிலையானார்.

சந்தேகநபர் தனது காணியில் சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதாக ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தார். எனினும் பொலிஸார் நடவடிக்கை எடுக்காத நிலையில் இந்தக் குற்றச்சாட்டை அவர் மீது முன்வைத்துள்ளனர் என்று சட்டத்தரணி கூறினார்.

அதனால் சந்தேகநபரை பிணையில் விடுவித்த நீதிவான் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவருக்கு எதிராகவும் தனித்தனியே குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்ந்தமை மற்றும் அதனைக் கடத்த முற்பட்டமை என அவர்கள் மூவருக்கு எதிராகப் பொலிஸார் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர்.

அந்த சந்தேகநபர்கள் மூவர் சார்பில் சட்டத்தரணி நிசாந்தன் முன்னிலையானார்.

சந்தேகநபர்கள் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் மூவரையும் தலா ஒரு லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்த நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர் ஒருவர் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்வாதாரத்துக்கு பெரும் இடர்களுக்கு மத்தியில் வாழ்கின்றார். அவர் தனது தண்டப்பணத்தைச் செலுத்த அவகாசம் வழங்க வேண்டும் என்று சட்டத்தரணி நிசாந்தன் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

அதனை ஏற்ற நீதிவான் ஏ.பீற்றர் போல், எதிரி தண்டப் பணத்தைச் செலுத்த தவணை வழங்கி அவரைப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார். (ஐ-07)

## யாரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார் என்ற கருத்தை தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறிகாந்தா கடுமையாகக் கண்டித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் இன விடுதலைக்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டமை நல்லதொரு விடயம் என சம்பந்தன் கூறியமை ஓர் பாரதூரமான கருத்தாகும். இதனை சாதாரண ஒருவர் கூறமாட்டார்கள். இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக – அதிலும் 2009 ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட பின்னர் கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் மக்களின் பெருந்தலைவராகக் கூறப்பட்ட – அவரது வாயில் இருந்து இவ்வாறான கருத்து வரும் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் உச்சம் பெற்ற நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்டபோது வடக்கு மண்ணில் எவ்வளவு அழிவுகள் இடம்பெற்றன? பல் லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இறுதிப்போரில் பலர் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உறவுகள் வருடக் கணக்கில் போராடி வருகின்றனர். தமிழ் மக்களின் பலம் வாய்ந்த பேரம் பேசும் சக்தியாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்தனர்.

அவர்களின் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் இப்போது தென்னிலங்கையில் இந்த நாடு பௌத்த, சிங்கள நாடு, இது சிங்கள தேசம் எனக் குரல்கள் எழுகின்றன. வடக்கு – கிழக்கில் வாழும் சிறுபான்மை இன மக்களுக்குத் தம்எதைக் கொடுத்தாலும் வாயை மூடிக்கொண்டு கைநீட்டி வாங்குவார்கள் என எண்ணுகின்றனர். 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்தபோது தென்னிலங்கையில் உள்ளவர்கள் கொண்டாடினார்கள்.

அது அவர்களின் இயல்பு. ஆனால் தமிழ் மக்களின் இனப் பிரச்சினையில் பேரம் பேசும் சக்தியாக இருந்த விடுதலைப் புலிகள் அழிந்தமை நல்ல விடயம் எனத்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் கூறியிருப்பதும் மிடையே விரக்தியை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறு நல்ல விடயம் என எந்தவகையில் கூறுகின்றார்? யாரைத் திருப்திப் படுத்த கூறுகின்றார் என்பதை அவரே கூற வேண்டும். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தனின் கருத்துக்கு நாம் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றார். (ஐ-07)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## உட்கட்சி நீதியை சம்பந்தன் முதலில் நிலைநிறுத்தட்டும்

"வருகின்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முற்றும் முழுதான ஆணையைத் தரவேண்டும். அந்த ஆணையின் ஒரு பகுதியேனும் வேறு எவருக்கும் போகக் கூடாது. அது மிக முக்கியம். அத்தியாவசியம்."

– இப்படிக் கூறியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எழுபதாவது ஆண்டு நிறைவுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போதே அவர் இதனைக் கூறியிருக்கின்றார்.

அவர் கூறியமை போன்று 1956 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆதரித்திருக்கின்றார்கள் என்பது உண்மையே.

அது தொடரவேண்டும் என்பதே சம்பந்தன் இப்போது முன்வைத்துள்ள கோரிக்கை.

ஏன் அது தொடர வேண்டும் என்பதற்கான காரணங்களையும் அவர் முன்வைத்திருக்கின்றார்.

எனினும் கூட அவை தமிழ் மக்களுக்குத் திருப்தி தரக் கூடிய போதுமான விளக்கம் அல்ல என்பதுதான் உண்மை நிலைமை.

2013 வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போதும் கூட, அந்தத் தேர்தலில் தமிழரசு தலைமை வகிக்கும் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஏன் தமிழ் மக்கள் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதை இப்படித்தான் வடக்கில் இடங்கள் தோறும் சென்று விளக்கினார் சம்பந்தன். அவரது கோரிக்கையை ஏற்று வடக்கு மக்கள் கூட்டமைப்புக்குப் பெரு வெற்றியை வாரிக் கொடுத்தார்கள். 38 ஆசனங்களின் முப்பது ஆசனங்களைக் கூட்டமைப்பு ஈட்டியது.

கடைசியில் நடந்தது என்ன? ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் என்ன நடந்தது என்பது தெரியும். அதை நாம் விலாவரியாக விவரிக்கத் தேவையில்லை.

இன்னும் கூட – இப்போதும் கூட – தமிழ் மக்களின் ஒட்டு மொத்த ஆணையைத் திரும்பவும் கோரும் சம்பந்தர், அதற்கு உரித்தான விதத்தில் தானும், தனது பிற தலைவர்களும், தனது கட்சியினரும் நடந்து கொண்டார்களா – நடந்து கொள்கின்றார்களா – என்று தம்மைத் தாமே கேட்டுக்கொள்ள வேண்டும் எனக் கோருகின்றோம்.

தமிழ் மக்களின் ஒட்டு மொத்த ஆணையை மீளவும் தமிழ் மக்களிடம் வந்து கோரும் சம்பந்தன், அந்தக் கோரிக்கையை முன்வைத்த அதே தமிழரசுக் கட்சியின் எழுபதாவது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் தந்தை செல்வா குறித்து முக்கியமான ஒரு கருத்தையும் முன்வைத்தார். அதையே சம்பந்தனும் அவரின் பிற தலைவர்களும் தங்களுக்குரிய பாடமாக எடுத்து நடந்து கொள்வார்களாயின், இப்படி மக்களின் ஆணையை முழுமையாகத் தரும்படி அவர் வந்து கேட்டுக் கெஞ்சத் தேவையில்லை. மக்கள் தாமாகவே தேடி வந்து அதைத் தமிழரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தருவார்கள்.

"தந்தை செல்வா தமிழ்ப் பேசும் மக்களை ஒற்றுமைப்படுத்தினார். வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள், தமிழ்ப் பேசும் முஸ்லிம் மக்கள் எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தினார்." – என்றெல்லாம் தந்தை செல்வா புகழ்பாடும் சம்பந்தன் ஐயா, அந்த வேலையைத் தாம் தமது தலைமையில் கவனித்தாரா என்று ஒரு தடவைத் தம்மைத் தாமே கேட்டுப் பார்த்துக் கொள்வது நல்லது.

அவரது சொந்த மாவட்டமான திருகோணமலையிலாகட்டும், அல்லது வடக்கு, கிழக்கில் பிற இடங்களிலாகட்டும் தமிழரசுக் கட்சியில் தமக்கு அடுத்த மட்டத் தலைவர்கள் நடத்திய திருகுதாளங்களை, கட்சியைப் பலவீனப்படுத்தும் விதத்தில் தமக்கு விரும்பிய ஒருசாரரைத் தூக்கி விட்டு, மறுசாரரை நெட்டித் தள்ளும் இத்தலைவர்களின் அடாவடித்தனங்களை சம்பந்தன் ஒரு நிமிடமாவது ஏறெடுத்துப் பார்த்தமை உண்டா? இல்லவே, இல்லை.

சமூகத்துக்குப் பொருத்தமில்லாதவர்கள், பதவிகளுக்கு உரிமைகோரும் அடிப்படைத் தகுதியோ, அருகதையோ, உரித்தோ இல்லாத பிரகிருதிககள் எல்லாம் தமிழிரசின் பெயரில் உயரவும் –

கட்சியோடும், மண்ணோடும், மக்களோடும் நின்றவர்கள் உதாசீனப்படுத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டு, வெளியேற்றப்படவும் –

காரணமான தலைவர்களின் அராஜகச் செயற்பாட்டுக்குத் தலையாட்டி, இடமளித்து, ஊக்கமளித்துப் பார்த்திருந்த 'லாயக்கற்ற' தலைவராகத்தான் வரலாறு தன்னை எடை போடப் போகின்றது என்பதை சம்பந்தன் புரிந்து கொள்ளவேண்டும்.

ஒரு கட்சியையே நீதி, நியாயம், ஒழுங்கு முறைப்படி நடத்தும் செயற்பாட்டை கண்காணித்து, கவனித்து, நெறிப்படுத்த முடியாதவர்கள் எல்லாம், இனத்தின் தலைவிதியைத் தீர்மானித்து, முடிவுகளை எடுக்கும் தலைவர்களாக இருப்பது என்பது தமிழினத்தின் தலைவிதி.

இத்தகைய தலைவிதியாக அமைந்த தலைவர்கள், இனியாவது – இவ்வளவு பின்னடைவுகள் – பாதிப்புக்கள் – போன்றவற்றின் பின்னராவது, கட்சி ஒழுங்கு முறையாக நடப்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொண்டு, பின்னர் மக்களிடம் வாக்குக் கேட்டு வருவார்களாயின் அப்போது மக்கள் முழு ஆணையை ஒப்படைப்பது குறித்து சிந்திப்பார்கள்.

# வடக்கில் சட்டவிரோத மணல் அகழ்வு உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவசர கடிதம்



யாழ்ப்பாணம், டிசெ. 20

மணல் ஏற்றிச் செல்வதற்கான வீதி அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்யும் அமைச்சரவையின் தற்காலிக தீர்மானத்தை துஷ்பிரயோகம் செய்து மக்களின் இயல்பு வாழ்கைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவோரின் செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கடற்றொழில் நீரக வள மூலங்கள் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த அனுமதிப் பத்திரம் இரத்து செய்யப்பட்டமையினால் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற துஷ்பிரயோக நடவடிக்கை தொடர்பாக காணி அபிவிருத்திச் சுற்றாடல் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேனவிற்கு அவசர கடிதம் எழுதியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட பகுதியில் அனுமதி அளிக்கப்படாத இடங்களில் மணல் அகழப்படுவதை உடனடியாக நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், மணல் அகழ்வு தொடர்பில் தென் பகுதிக்கும் வட பகுதிக்கும் இடையில் வித்தியாசங்கள் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர், வடக்கு மாகாணத்தில் பரவலாக மணல் திட்டுக்கள் காணப்படுவதால் வீதி அனுமதி இரத்தானது பல்வேறு தரப்பினரையும் அனுமதி அளிக்கப்படாத இடங்களில் எல்லாம் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதற்கு வாய்ப்பான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்தோடு சட்ட ரீதியாக அனுமதிக்கப்படாத இடங்களில் மணல் அகழ்வில் ஈடுபடுவதால் சுற்றாடல் பாதுகாப்புக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவேண்டும் என்று சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியின்போது துஷ்பிரயோகங்கள் தொடர்பாக காத்திரமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாது இருந்த தரப்புக்கள் தற்போதைய அரசு மக்கள் நலன்சார்ந்து மேற்கொண்ட தீர்மானங்களுக்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்து தெரிவித்து வருவதற்கு கௌரவ அமைச்சர் தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். (ஐ)

# மனைவியைக் கைமோசக் கொலை செய்த கணவருக்கு 7 ஆண்டுச் சிறை

## யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 20

மனைவியைத் தாக்கி அவரது உயிரிழப்புக் காரணமாகவிருந்த குடும்பத் தலைவருக்கு 7 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2012ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி கிளிநொச்சி திருநகரில் யோகலிங்கம் பிரேமினி என்ற 5 பிள்ளைகளின் தாயார் அவரது கணவனால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

சம்பவத்தையடுத்து கொல்லப்பட்டவரின் கணவரான கந்தையா யோகலிங்கம் கைது செய்யப்பட்டார். அவர் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றால் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் நடைபெற்று வழக்கேடு சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் சந்தேகநபர் மீது இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 296ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய கொலைக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் 2019 ஜூன் 7ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு விளக்கத்துக்கு எடுக்கப்பட்டது.

வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தியதுடன், எதிரி சார்பில் மூத்த சட்டத்தரணி விஸ்வலிங்கம் திருக்குமரன் முன்னிலையானார்.

இந்த வழக்கின் விளக்கம், சமர்ப்பணங்கள் நிறைவடைந்த நிலையில் தீர்ப்புக்கு நேற்று நியமிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக அழைக்கப்பட்டது. எதிரி மன்றில் முற்படுத்தப்பட்டார்.

எதிரி கந்தையா யோகலிங்கம், தனது சொந்த மச்சாள் பிரேமினியை காதலித்து திருமணமாகியுள்ளார் என்று சாட்சியங்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இருவருக்கும் இடையே தீர்க்கப்படாத சிக்கல் ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்துள்ளனர்.

2012ஆம் ஆண்டு மே 26ஆம் திகதி பிள்ளைகளைப் பார்க்கவேண்டும் மற்றும் இதர விடயங்கள் பற்றிப் பேசவேண்டும் என அழையா விருந்தாளியாக பிரேமினியின் வீட்டுக்குச் சென்ற எதிரியுடன், பிரேமினி தர்க்கப்பட்டுள்ளார் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. திடீரென ஏற்பட்ட கோபாவேசத்தில் தன்னிலையிழந்து, எதிரி குறித்த பிரேமினியை பொல்லால் தாக்கியிருந்தார்.

இவ்வேளையில், அதனை அயலவராகிய சகாயநாதன் அன்னமேரி கண்டிருக்கிறார். இந்த இடத்தில் எதிரியினால் புரியப்பட்ட செயல் திட்டமிடப்பட்டு பிரேமினியை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் புரியப்பட்டதா என்பது வினாவாகின்றது.

எனவே எதிரி அவரது மனைவி பிரேமினியை கொலை செய்யும் குற்ற எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை என்றும் திடீரென ஏற்பட்ட தர்க்கத்தின்போது விளைந்த தன்னிலையிழப்பு, திடீர் கோபாவேசம் என்பன காரணமான செயற்பாட்டின் விளைவாகவே பிரேமினி தாக்கப்பட்டு அவருடைய உயிரிழப்பு ஏற்பட்டதாக மன்று, மன்றின் மொத்த சாட்சிகளின் பகுப்பாய்வின் மூலம் தீர்மானத்தைக் கொள்கின்றது.

எனவே எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு குற்றமற்றவர் எனக் காணப்படுகிறார். ஆயினும் மன்றின் தீர்மானத்தின் அடிப்படையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கு குறைந்த குற்றச்சாட்டாகிய தண்டனைச் சட்டக்கோவை 297ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப் படவேண்டிய கொலையாகாத குற்றத்துக்கு இடமான மனித உயிர் போக்கல் என்ற குற்றத்தை இழைத்த குற்றச்சாட்டு எதிரி குற்றவாளியாகக் காணப்படுகிறார் என்று மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்தார்.

குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது. அத்துடன், 5 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்படுகிறது. அதனைச் செலுத்தத் தவறின் 5 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

எதிரி தொடர்ச்சியாக 7 ஆண்டுகளுக்கு மேல் விளக்கமறியலில் இருப்பதனால் அதனை கருத்தில் எடுத்து அவருக்கான தண்டனைக் காலம் 7 ஆண்டுகளாகக் குறைக்கப்படுவதாக மன்று சுட்டிக்காட்டியது. (ஐ – 07)

## நாளை

21.12.2019 – சனிக்கிழமை

திதி : தசமி மாலை 5.51 வரை
நட்சத்திரம்: சித்திரை மரண மு.இ 8.43 வரை
இராகுகாலம் : 9.24 – 10.54
சுப நேரம் : 3.24 – 4.54

# ரணவக்கவின் கைது அரசியல் பழிவாங்கல்!

## அரசுக்கு எதிராக கடும் விமர்சனங்கள்



கொழும்பு, டிசெ. 20

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்ட சம்பவம், புதிய அரசின் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்று கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்தக் கைது குறித்து சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டுள்ள ஐ.தே.கவின் முன்னாள் அமைச்சர்களான மங்கள சமரவீர, ஹர்ஷ டி சில்வா, ஏரான் விக்ரமரத்ன போன்றவர்கள், புதிய அரசு அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியானாலும், சிறுத்தை தனது புள்ளிகளை மாற்றிக் கொள்ள முடியாது என்பதை இந்தளவு விரைவாக கோட்டாபய ராஜபக்ஷ நிரூபிப்பார் என்று நினைத்துப் பார்க்கவில்லை என்று கீச்சகப் பதிவு ஒன்றில் குறிப்பிட்டுள்ள மங்கள சமரவீர, ‘அனுதாபம் – சட்டத்தின் ஆட்சியின் மறுபிறப்பு 2015 ஜனவரி 08, மூச்சுத் திறணை வைத்துக் கொலை, 2019 டிசெம்பர் 18 என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சியாளரின் பழிவாங்கும் அரசியல் அதன் பாணியில் தொடங்கியது என்று ஹர்ஷ டி சில்வா பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

அதேவேளை ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய கீச்சகப் பதிவு ஒன்றில், சிங்கப்பூரின் மோசமான வகையினலான ஒரு காவல்துறை அரசை நோக்கிய முதல் படியை இலங்கை எடுத்துள்ளதாகவும், வரவிருக்கும் நாள்களில் குறைந்தபட்சம் ஒரு முன்னாள் அமைச்சராவது கைது செய்யப்படுவார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## விதிமுறைகளுக்கு முரணான கைது!

கொழும்பு, டிசெ. 20

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்ட விவகாரத்தில் முறையான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ராஜகிரியவில் 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்து ஒன்று தொடர்பாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



நேற்று முன் தினம் முன்னிரவு அவரது வீட்டுக்குச் சென்ற கொழும்பு குற்றப் பிரிவு பொலிஸார், கைது செய்ய வந்திருப்பதாக கூறியிருந்தனர்.

அப்போது, கைது செய்வதற்கான நீதிவானின் உத்தரவு உள்ளதா, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்வதற்கு முன்னர் சபாநாயகரிடம் பெறப்படும் அனுமதி உள்ளதா என்று சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பினார்.

எனினும் பொலிஸார் எந்த அனுமதிகளையும் பெற்றிருக்கவில்லை. இதையடுத்து, சம்பிக்க ரணவக்கவின் இல்லத்தில் இருந்தே பொலிஸ் அதிகாரி ஒருவர், பிரதிச் சபாநாயகருடன் தொலைபேசியில் பேசினார்.

முறையற்ற விதத்தில் கைது செய்யப்படுவதற்கு சம்பிக்க ரணவக்க எதிர்ப்பை வெளியிட்டார்.

எனினும், குற்றப் பிரிவு பொலிஸார் அவரை கைது செய்து அழைத்துச் சென்றனர். (ஐ)

## மின்தடை

யாழ்ப்பாணம், டிச.20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைசனிக்கிழமை **காலை08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை -**

**யாழ் பிரதேசத்தில் -**

கரணவாய், இலகாமம், நாவலர்மடம், நெல்லியடி, கொடிகாமம் வீதி , சாமியன் அரசடி, விக்னேஸ்வரா, சம்பந்தர்கடை, கிழவிதோட்டம், காளிகோவிலடி, யாக்கரு, கலிகை, அரசடி, வலிக் கந்தோட்டம், துன்னாலை, தாமரைக் குளத்தடி, இந்திரம்மன் கோவிலடி, காளிகோவிலடி, வதிரி, இரும்புமதவடி, சக்களாவத்தை, தேவரையாழி, மனோகரா, திக்கம், திக்கம் சித்திவிநாயகர், முடக்காடு,

செட்டி, நாவலர் வீதி, கனகரடணம் வீதி, நல்லூர் குறுக்கு வீதி, கச்சேரி நல்லூர் வீதி, ஸ்ரான்லி கல்லூரி, விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதி, மணிக்கூட்டு கோபுர வீதி, ஞானம்ஸ் விடுதி, லதுசியந் விடுதி, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், கமலேஸ் வரி, சிவராதா புடவையகம், றொப்பாஸ், அன்னை நாகா பூட் சிற்றி, LOLC, குருநகர், சீ நார், சிறீலங்கா ஜஸ் தொழிற்சாலை, Nefad வலைத் தொழிற் சாலை, கடற் கரை வீதி ஜஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

H.P வீதி, நம்பைக்குளம், கந்தசாமி கோவில் வீதி, மில் வீதி, முதலாம் குறுக்குத் தெரு, 2 ஆம் குறுக்குத்தெரு, சூசைப்பிள் ளையார்குளம், பஜார் வீதி, இலுப்பயடி, மில் வீதி. ராணி அரிசி ஆலை, எஸ்.வி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, ஓவியா விடுதி, கந்தசாமிநகர், நித்திக் குளம். சண்முகபுரம், கங்கன்குளம், செட்டிகுளம், புளியங்குளம், காந்திநகர், அரசடிகுளம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

சிறுநாவற்குளத்திலிருந்து தலை மன்னார் வரை, தலைமன்னார் கடற் படைமுகாம், தலைம ன்னார் Palmyra house, கூல்மென் ஜஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஜஸ் தொழிற்சாலை, பேசாலை ஜஸ் தொழிற்சாலை, வங்காலை ஜஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத்தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஜஸ் தொழிற் சாலை, கீரி ஜஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலை யம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட் சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் – மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## வடக்கு ஆளுநராக திருமதி சாள்ஸை நியமிக்க அனுமதித்த அமைச்சரவை

கொழும்பு, டிசெ. 20

வடக்கு மாகாண ஆளுநராக, சுகாதார அமைச்சின் செய லராக உள்ள பி.எம்.எஸ். சாள்ஸை நியமிப்பதற்கான அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை அலுவலகர் ஒருவரை அவரது சேவைக்கான வரப்பிரசாதங்களுடன் ஆளுநர் பதவிக்கு நியமிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அமைச்சரவை இந்த ஒப்புதலை வழங்கியது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் மாலை கூடிய அமைச்சரவையில் இலங்கை நிர்வாக சேவையில் மூத்த அதிகாரியான பி.எம்.எஸ் சாள்ஸை நியமிப்பதற்கான முன்மொழி முன்வைக்கப்பட்டது. அதன்போதே அமைச்சரவை இந்த ஒப்புதலை வழங்கியது.

இதன்மூலம் வடக்கு மாகாண ஆளுநராக பி.எம்.எஸ். சாள்ஸ் நியமிக்கப்படுவதுடன், அவர் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக தொடர்ந்து சேவையில் இருப்பார். (ஐ)

## சுவிஸின் குற்றச்சாட்டை நிராகரித்தது இலங்கை!



கொழும்பு, டிசெ. 20

சுவிஸ் தூதரகப் பணியாளர் மீதான விசாரணைகள் விடயத்தில், இரு நாடுகளும் மதிக்கும் அனைத்துலக விதி முறைகளுக்கு இணங்க, ஒவ்வொரு கட்டத்திலும் உரிய செயல்முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன என சுவிஸ் வெளிவிவகார அமைச்சரிடம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சுவிஸ் தூதரகப் பணியாளர் கானியர் பனிஸ்டர் பிரான்சிஸ் தொடர்பான விசாரணையின் நிலை குறித்து, சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் இக்னாசியோ காசிஸ் நேற்றுமுன்தினம் மாலை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் உடன் தொலைபேசியில் உரையாடியிருந்தார்.

இதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர், நாட்டின் தேசிய சட்டம் மற்றும் அனைத்துலக நீதி நியமங்களுக்கு இணங்கவே இலங்கை செயற்படுகிறது, அதற்கு மாறாக இடம்பெறுவதான எந்தவொரு கூற்றும் தவறானது என்று குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் குறித்து முதன்முதலில் முறைப்பாடு கூறப்பட்டதில் இருந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, சுவிஸ் வெளிவிவகார அமைச்சருக்கு விரிவாக எடுத்துக் கூறிய தினேஷ் குணவர்தன, ஒவ்வொரு நடவடிக்கையின் போதும், இரு நாடுகளும் மதிக்கும் அனைத்துலக விதிமுறைகளுக்கு இணங்க உரிய செயல்முறை பின்பற்றப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு நல்லுறவுகளைக் கருத்தில் கொண்டு, இந்தச் செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு சாத்தியமான அனைத்து ஒத்துழைப்புகளையும் விரிவுபடுத்துமாறு சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர், கானியர் பனிஸ்டர் பிரான்சிஸ் ஓர் இலங்கையர், இந்த விவகாரம் தற்போது நீதிமன்றத்தில் உள்ளது. நாட்டின் சட்டத்தின்படி இலங்கை அரசு தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும். அவருக்குச் சாத்தியமான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. அவரின் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்திய இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, இது தொடர்பாகக் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதுவருடன், வெளிவிவகார அமைச்சு தொடர்ந்து கலந்துரையாடல்களில் ஈடுபடும் என்று உறுதியளித்தார். (ஐ)

# பாக். எல்லையில் எந்நேரமும் தொல்லை: இந்திய இராணுவத் தளபதி எச்சரிக்கை!



புதுடெல்லி, டிசெ.20

பாகிஸ்தானுடனான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப்பகுதியில் நிலைமை எந்த நேரத்திலும் மோசமாகலாம் எனவும், இதனைச் சந்திக்க தயாராக இருக்க வேண்டும் எனவும் இந்திய இராணுவத் தளபதி பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. சில நாள்களுக்கு முன் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்றனர். ஆனால், அவர்களின் முயற்சியை இந்தியஈராணுவம் முறியடித்தது. இதில், இந்திய வீரர் ஒருவர் வீரமரணம் அடைந்தார். மற்றொரு வீரர் காயமடைந்துள்ளார். மூன்று நாள்களுக்கு ஒவ்வொரு முறையும், அத்துமீறுவதை பாகிஸ்தான் இராணுவம் வழக்கமாக வைத்துள்ளது. 778 கி.மீ., தூரம் எல்லை கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில், இந்த ஆண்டு இதுவரை 2,900 முறை பாகிஸ்தானராணுவம் அத்துமீறித் தாக்குதல் நடத்தியுள்ளது. 2017இல் 871 முறையும், 2018 இல் 1,629 முறையும் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில், இராணுவ தளபதி பிபின் ராவத் கூறுகையில், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதி அருகே நிலைமை எப்போது வேண்டுமானாலும் மோசமாகும் சூழ்நிலை உள்ளது. இதை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்றார்.

# மோடி தடுமாறி விழுந்த படியை இடித்துக் கட்டுவதற்கு முடிவு!

லக்னோ,டிசெ.20

கான்பூரில் கடந்த வாரம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, படியேறும் போது தடுமாறி விழுந்தார். அவர் தடுக்கி விழுந்த படியை இடித்துச் சீரமைக்க உத்தரப்பிரதேச அரசு முடிவு செய்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரில் கடந்த வாரம் நடந்த 'நமாமி கங்கா' நிகழ்ச்சியில், பிரதமர் மோடி கலந்து கொண்டார். படகுப் பயணத்தில் கங்கையை ஆய்வு செய்து அவர் திரும்பும்போது, படி ஏறுகையில் தடுமாறி விழுந்தார். அவரை, எஸ்.பி.ஜி. வீரர்கள் தாங்கி பிடித்தனர். பிரதமருக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை. இந்நிலையில் அந்தப் படிக்கட்டுகளின் உயரம் சீரற்றதாக இருப்பதால், அதனை இடித்துக் கட்ட மாநில அரசு முடிவு செய்துள்ளது.



இது குறித்து அம்மண்டல கமினர் பாட்டே கூறுகையில், 'பிரதமர் மோடி தடுமாறி விழுந்த படிக்கட்டின் உயரம் மட்டும் மற்றப் படிகட்டுகளிலிருந்து வேறுபடுகிறது. அப்படியை மட்டும் இடித்து சரியான உயரத்தில் அதனை கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னரே வேறு சிலரும் அப்படியில் தடுமாறி விழுந்துள்ளனர்' இவ்வாறு அவர் கூறினார்.

# குடியுரிமைச் சட்டத்திருத்ததுக்கு எதிரான போராட்டம் இந்தியாவில் தீவிரமடைகிறது



லக்னோ,டிசெ.20

உத்தரப் பிரதேசத் தலைநகர் லக்னோவில் 144 தடை உத்தரவை மீறி சமாஜ்வாதி கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்காளதேசத்தில் இருந்து அகதிகளாக வந்து இந்தியாவில் தங்கியுள்ள முஸ்லிம் அல்லாதவர்களுக்கு குடியுரிமை அளிக்கும் வகையிலான குடியுரிமை சட்டதிருத்தத்தை மத்திய பாரதீய ஜனதாக் கட்சி அரசு சமீபத்தில் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் குடியுரிமை சட்டத்திருத்தத்தை திரும்பப் பெறக்கோரியும் அசாம், மேற்கு வங்கம், மேகாலயா உள்ளிட்ட மாநிலங்கள் உள்பட நாடு முழுவதும் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் போராட் டத்தில் ஈடுபட்டுள்ளனர். டெல்லி, அசாம், கர்நாடகா, பிஹார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் முன்னெச்சரிக்கை நட வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் உத்திரப்பிரதேசத்தில் குடியுரிமை சட்டத்திருத்தத்தைக் கண் டித்து எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்த உள்ளன என அறிவிக்கப்பட்டிருந்தது. குடியுரிமை சட்டத்திருத்ததுக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்துள்ளதையடுத்து உத்தி ரப்பிரதேசத்தில் 144 தடை உத்தரவு பிறப்பித்துமாநில அரசு உத்தர விட்டுள்ளது.

அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் உத்திரப்பிரதேச தலைநகர் லக்னோவில் விதிக்கப்பட்டிருந்த 144 தடை உத்தரவை மீறி சமாஜ்வாதி கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்தும் குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராகவும் அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

இதனையடுத்து தடையை மீறி பொது இடத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் சமாஜ்வாதி நிர்வாகிகளையும், தொண்டர்களையும், உத்திரப்பிரதேச காவல்துறையினர் கைது செய்தனர்.

# தமிழகத்தில் சதித்திட்டம்: 4 பேர் கும்பல் ஊடுருவல்?

திருப்பூர்,டிசெ.20

தமிழகத்தில் சதித்திட்டம் ஒன்றை நிறைவேற்ற நான்கு பேர் கும்பல் ஊடுருவியுள்ளதாக வெளியாகியுள்ள தகவலால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



குடியுரிமை திருத்த சட்டம் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, வடகிழக்கு மாநிலங்களில் வன்முறை வெடித்தது.

தமிழகத்தில் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டு, கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அனுமதியின்றி போராட்டங்களில் ஈடுபடுவோர், கைது செய்யப்பட்டு வருகின்றனர். இச்சூழலில் தமிழகத்தில் நான்கு பேர் கும்பல், இந்து அமைப்புப் பிரமுகர்களுக்கு குறிவைத்து, அவர்களைப்பின்தொடர்வதாகதகவல் வெளியாகியுள்ளது. அவர்கள் சதிச் செயலில் ஈடுபடத் திட்டமிட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் பயங்கரவாதிகளா அல்லது வேறு ஏதேனும் அமைப்புகளைச் சேர்ந்தவர்களா என்பது குறித்த தகவல் இல்லை. இவர் கள் வலம் வருவதாகக் கூறப்படும் வாகன எண் உள்ளிட்ட விவரங்களை மாவட்ட வாரியாக பொலிஸ் கமிஷனர் மற்றும் எஸ்.பி.அலுவலகங்களுக்கு தெரிவிக்கப்பட்டு பொலிஸார்உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் மற்றும்மாநகரபொலிஸ் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பொலிஸ் சோதனைச் சாவடிகளுக்கு, சம்பந்தப்பட்ட காரின் எண் குறித்து, பொலிஸ் கட்டுப்பாட்டு அறை மூலம் தகவல் அளிக்கப்பட்டது.

அனைத் துப் பகுதிகளிலும், பொலிஸார் தீவிரக் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உளவுப்பிரிவு பொலிஸாரிடம் விசாரித்த போது, 'இரு நாள்களாகக் காரின் எண்ணை வைத்து, அனைத்துப்பொலிஸ் சோதனைச் சாவடிகளிலும், வாகன தணிக்கை மற்றும் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் கூடும் பிரதான இடங்கள், தங்கும் விடுதிகளை கண்காணித்து வருகிறோம்' என்றனர்.

# ஆந்திராவுக்கு 3 தலைநகரங்கள் என்று அறிவிப்பு திருப்பதியை 4ஆவது தலைநகராக்க வேண்டுதல்

திருப்பதி,டிசெ.20

ஆந்திராவுக்கு மூன்று தலைநகரங்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், திருப்பதியை ஆன்மீகத் தலைநகராக அறிவிக்குமாறு கோரிக்கை எழுந்துள்ளது.

ஆந்திராவில், முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி தலைமையிலான, வை.எஸ். ஆர்.காங்கிரஸ் ஆட்சி அமைந்துள்ளது. இங்கே, மாநிலத்துக்கு மூன்று தலைநகர்கள் உருவாக்கப்பட உள்ளன என முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி அறிவித்து உள்ளார்.

இதன்படி, ஆந்திராவிற்கு நிர்வாகத் தலைநகராக விசாகப்பட்டினமும், நீதிமன்றத் தலைநகராக கர்னூலும்; சட்டசபைத் தலைநகராக அமராவதியும் அறிவிக்கப்பட்டு உள்ளன. இதற்கு, வை.எஸ். ஆர்.காங்கிரஸ் கட்சியினர் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், அம்மாநிலத்தை சேர்ந்த எதிர்க்கட்சிகளும், பொது மக்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ராயலசீமா போராட்ட சமிதியின் தலைவர் நவீன்குமார் ரெட்டி,

ஆந்திராவில் ஏற்படுத்தப்பட உள்ள மூன்று தலைநகரங்களுடன் நான்காவது மற்றும் ஆன்மீகத் தலைநகராக திருப்பதியை அறிவிக்க வேண்டும் என ஆந்திர முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்து உள்ளேன். - என்று கூறியுள்ளார்.



# அன்பழகனுக்கு 98 ஆவது பிறந்தநாள்



வயது முதிர்வின் காரணமாக, உடல்நிலை தளர்ந்து, தன்னுடைய இல்லத்தில் ஓய்வெடுத்து வருகிறார் திமுக பொதுச் செயலாளர் க.அன்பழகன். அவர் தன்னுடைய 98 ஆவது பிறந்தநாளை நேற்று (டிச.19) கொண்டாடினார். அதனை முன்னிட்டு, தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் உட்பட அக்கட்சியின் மூத்த தலைவர்கள், க.அன்பழகனின் இல்லத்திற்கு சென்று அவருக்கு பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர்.

# சீன நிலக்கரிச் சுரங்கத்துக்குள் வெள்ளம் புகுந்து மூன்று நாள்களின் பின் 13 தொழிலாளர்களும் மீட்பு

பீஜிங்,டிசெ.20

சீனாவில் நிலக்கரி சுரங்கத்துக்குள் வெள்ளம் புகுந்த 3 நாள்களுக்குப் பிறகு அதில் சிக்கிய 13 தொழிலாளர்கள் உயிருடன் மீட்கப்பட்டு உள்ளனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியில் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள யிபின் நகரில் சான்முசு என்ற நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. கடந்த சனிக்கிழமை மதியம் இந்த சுரங்கத்தில் தொழிலாளர்கள் நிலக்கரியை வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக சுரங்கத்துக்குள் வெள்ளநீர் புகுந்தது.

இதில் சுரங்கத்தின் மையப்பகுதியில் வேலை பார்த்துக்கொண்டிருந்த 18 தொழிலாளர்கள் உள்ளே சிக்கிக்கொண்டனர். விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் மீட்புகுழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்பு பணியில் இறங்கினர். ஆனால் அதற்குள் 5 தொழிலாளர்கள் நீரில் மூழ்கி பலியாகினர்.

இதற்கிடையே சுரங்கத்தின் நுழைவாயிலில் இருந்து 10 கி.மீ. தொலைவில் 13 தொழிலாளர்கள் சிக்கியிருப்பது தெரிய வந்தது. ஆனால் சுரங்கத்துக்குள் மின்சாரம், தகவல் தொடர்பு மற்றும் செயற்கை சுவாச அமைப்புகள் அனைத்தும் செயலிழந்தமையோடு, எரிவாயுக் கசிவு ஏற்படும் அபாயமும் எழுந்ததால் மீட்பு குழுவினருக்குச் சிக்கல் ஏற்பட்டது.



எனினும் நம்பிக்கையோடு மீட்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டன. 13 மீட்பு குழுக்களை சேர்ந்த 251பேர் இந்த மீட்பு பணியில் ஈடுபட்டனர். தொழிலாளர்களை உயிருடன் மீட்பதற்கு இருக்கும் அத்தனை வாய்ப்புகளையும் ஆராய்ந்து அதற்கான பணிகளை தீவிரப்படுத்தினர்.

எனினும் விபத்து நடந்து 2 நாள்களுக்கு மேல் ஆனதால் தொழிலாளர்கள் உயிரிழந்திருப்பார்களோ என்ற அச்சம் எழுந்தது.

எனவே தொழிலாளர்கள் உயிருடன் இருப்பதை உறுதி செய்ய சுரங்கத்தின் ஒரு முனையில் இருந்து சுரங்கத்துக்குள் உள்ள இரும்பு கம்பியை மீட்புகுழுவினர் பலமாக தட்டினர். அதனை தொடர்ந்து சுரங்கத்தின் மற்றொரு முனையிலும் இரும்பு கம்பியை தட்டும் சத்தம் கேட்டது.

இதன் மூலம் தொழிலாளர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதும், அவர்களே கம்பியை தட்டி பதில் அளித்தனர் என்பது உறுதி செய்யப்பட்டது. இது மீட்பு குழுவினருக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. உடனடியாக அவர்கள் மீட்பு பணியை துரிதப்படுத்தினர்.

இந்த நிலையில் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் சுரங்கத்துக்குள் சிக்கியிருந்த ஒரு தொழிலாளர் தாமாக வெளியே வந்தார். அவர் தனது சக ஊழியர்கள் 12 பேரும் சுரங்கத்துக்குள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என மீட்பு குழுவினரிடம் கூறினார்.

மேலும் அவர்கள் இருக்கும் இடத்துக்கு எளிதில் செல்வதற்கான வழிமுறைகள் குறித்தும் அவர் விளக்கினார். அதன்படி தொழிலாளர்களை மீட்க மீட்பு குழுவினர் சுரங்கத்துக்குள் சென்றனர்.

காலை 7.56 மணிக்குள் தொழிலாளர்கள் 12 பேரையும் பத்திரமாக மீட்டு மீட்பு குழுவினர் வெளியே வந்தனர். அப்போது சுரங்கத்துக்கு வெளியே இருந்த சக மீட்பு குழுவினர், அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் கைகளை தட்டி ஆரவாரம் செய்தனர்.

விபத்து நடந்த சுமார் 3 நாள்களுக்குப் பிறகு தொழிலாளர்கள் 13 பேரும் உயிருடன் மீட்கப்பட்டு உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டிரம்பைப் பதவி நீக்கக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியது மக்கள் பிரதிநிதிகள் சபை

## ஆனாலும் செனட் சபை அவர் பதவியைக் காப்பாற்றும்

வொஷிங்டன்,டிசெ.20

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பைப் பதவி நீக்க கோரும் தீர்மானம் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியது.

அமெரிக்காவில் அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையில் குடியரசுக் கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது. அங்கு எதிர்க்கட்சியாக ஜனநாயகக் கட்சி உள்ளது.

அடுத்த ஆண்டு அமெரிக்காவில் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதில், முன்னாள் துணை அதிபர் மற்றும் ஜனநாயக கட்சியை சேர்ந்தவரான ஜோ பிடன், அதிபர் டிரம்புக்கு முக்கிய போட்டியாக இருப்பார் எனக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பிடனின் மகனுக்கு உக்ரேன் நாட்டிலுள்ள எரிவாயு நிறுவனத்துடன் வர்த்தக தொடர்பு உள்ளது எனஜ் குற்றச்சாட்டு எழுந்தது. இதுபற்றி விசாரணை மேற்கொள்ளும்படி அந்நாட்டு அதிபரிடம் டிரம்ப் கேட்டு கொண்டார்.

இதனால் டிரம்ப், அமெரிக்க அரசமைப்பு சட்டம், தேசிய பாதுகாப்பு, அதிபர் தேர்தலுக்கான நம்பகத்தன்மை உள்ளிட்டவற்றுக்கு ஆபத்து விளைவித்து விட்டார் என்று ஜனநாயக கட்சி குற்றம் சாட்டியது.

இதை அடுத்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அவர் மீது குற்ற விசாரணைப் பீரேரணை கொண்டு வருவது என முடிவு செய்து, அதன் முதல்கட்டமாக பிரதிநிதிகள் சபையில் அது தாக்கல் செய்யப்பட்டது.

பிரதிநிதிகள் சபையில் ஜனநாயகக் கட்சிக்கு 236 உறுப்பினர்களும், டிரம்பின் குடியரசு கட்சிக்கு 197 உறுப்பினர்களும் உள்ளனர். இதனால் அங்கு குற்ற விசாரணைப் பிரேரணை எளிதில் நிறைவேறும் சூழல் இருந்தது.



இந்நிலையில், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பதவி நீக்க கோரும் தீர்மானம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியுள்ளது.

எனினும் இந்த பதவி நீக்க கோரும் விவகாரம் பற்றி டிரம்ப் கூறும்பொழுது, அரசை கவிழ்க்கும் முயற்சி, அமெரிக்கா மீது நடைபெறும் தாக்குதல் எனக்குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானம் செனட் சபையிலும் நிறைவேறினால் மட்டுமே, அதிபர் டிரம்பை பதவியில் இருந்து நீக்க முடியும்.

ஆனால் 100 இடங்களை கொண்ட செனட் சபையில் டிரம்பின் குடியரசு கட்சிக்கு 53 உறுப்பினர்களுடன் பெரும்பான்மை இருப்பதால் கண்டனப் பீரேரணை தோற்கடிக்கப்பட்டு, டிரம்பின் பதவி காப்பாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

# பன்றி காய்ச்சலுக்கு ஏமனில் 8 பேர் பலி!



ஏடன்,டிசெ.20

ஏமன் நாட்டின் வடக்கே பன்றி காய்ச்சலுக்கு 8 பேர் பலியாகி உள்ளனர்.

ஏமன் நாட்டில் கடந்த 2015ம் ஆண்டு அதிபராக பதவியேற்ற அப்திராபவ் மன்சூர் ஹாடியின் அரசுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தபொழுதும். அங்கு ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அரசை எதிர்த்து மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் ஏமனில் சுகாதார சேவை சீர்கேடு, மருத்துவ கட்டமைப்பில்லா நிலை மற்றும் உணவு பற்றாக்குறை ஆகியவை ஏற்பட்டு அதனால் வியாதிகள் பரவி வருகின்றன.

ஏமனின் வடக்கு பகுதியில் ஷியா ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இங்கு பருவகால காய்ச்சல் பாதிப்பிற்கு 1,600 பேர் பாதிப்படைந்து உள்ளனர். அவர்களில் 48 பேர் பலியாகி உள்ளனர்.

இவர்களில் 8 பேர் பன்றி காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர் என ஹவுதி சுகாதார மந்திரி தஹா தெரிவித்து உள்ளார். இதனை அடுத்து அனைத்து மருத்துவமனைகளிலும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பன்றி காய்ச்சல் பாதிப்பிற்கு சிகிச்சை அளிப்பதற்காக தனியாக அறைகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

# பனாமாச் சிறைக்குள் கைதிகள் துப்பாக்கிச் சமர்; 12 பேர் சாவு!

## மேலும் 13 கைதிகள் படுகாயம்




பனாமா சிட்டி,டிசெ.20

பனாமா நாட்டில் சிறையில் கைதிகள் இடையே ஏற்பட்ட மோதலில் 12 பேர் பலியாகினர்.

பனாமா நாட்டின் தலைநகர் பனாமா சிட்டியில் லா ஜொயிதா என்ற சிறைச்சாலையில் நூற்றுக்கணக்கான கைதிகள் அடைத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

செவ்வாயன்று இந்தச் சிறையில் கைதிகள் இரு தரப்பினரிடையே திடீர் மோதல் வெடித்தது. சிறைக்குள் கடத்திவரப்பட்ட துப்பாக்கிகளைக் கொண்டு கைதிகள் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொண்டனர்.

இதனால் சிறைக்குள் பெரும் பதற்றம் உருவானது. இரு தரப்பினருக்கும் இடையே நீண்ட நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. அதனைத் தொடர்ந்து அதிரடிப்படை பொலிஸார் விரைந்து வந்து மோதலில் ஈடுபட்ட கைதிகளைச் சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்தனர்.

அதன் பிறகு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும் கைதிகளுக்கு இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் 12 பேர் பலியாகினர். மேலும் 13 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

இந்த மோதலில் சிறைக்காவலர்களுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் கைதிகள் யாரும் தப்பி ஓடவில்லை என்றும் அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# இந்துமதம் ஒரு வாழும் நெறி!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா



வையத்துள் வாழ்வாங்கு வாழும் வகையினை யாவருக்கும் காட்டுகின்ற நெறி முறைகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டதாக இந்துமதம் விளங்குகின்றது.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என எண்ணுபவர்களையும், இப்படித்தான் வாழவேண்டும் என அன்புடனும், அரவணைப்புடனும் அணுகி அவர்கள் அனைவரும் வாழ்வதற்குத் தேவையான வற்றைக் காட்டி நிற்பதால் இந்துமதம் என்றும் வாழும் நெறியாக இருந்து வருகிறது எனலாம். நெகிழ்ச்சியும்,சகிப்புத்தன்மையும், சுதந்திரமும், கொண்டதாக இந்துமதம் திகழ்கின்றமையாலும் அதனை ஒரு வாழும் நெறி என்று குறிப்பிடலாம்.

உலகில் பல மதங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் – தொடங்கியவர்கள், தொடங்கியகாலம் என – ஒரு வரையறை காணப்படுகிறது. ஆனால் இந்துமதத்தை யார் தொடக்கினார்கள்? எப்பொழுது தொடங்கப்பட்டது? –என்பதற்கு எந்தவித ஆதாரங்களும் காணப்படவில்லை. ஆதியும் அந்தமும் அற்ற மதமாக இந்துமதம் விளங்குவதைக் காண்கின்றோம். இதனால்தான் இந்துமதத்தை சனாதன தர்மம் என்று குறிப்பிட்டனர். 'சனாதன' என்றால் நிலையானது என்று பொருளாகும். அதாவது நித்தியமானது, அழிவில்லாதது என்பதாகும். இதனாலும் இதனை வாழும் நெறி என்று அழைக்கலாம்.

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று கூறப்பட்டு வந்ததை நாமனைவரும் கேட்டிருக்கின்றோம். அதற்கு எடுத்துக்காட்டாக 'மனமொரு குரங்கு' என்று ஒரு உதாரணம் காட்டப்படுவது நோக்கத்தக்கது.

விலங்காக இருந்த மனித சிந்தனை, செயற்பாடு யாவும் சற்று மாறுதலடைந்து சிந்திக்கத்தக்க மனிதனாக மாற்றம் அடைந்ததற்குக் காரணம் மனித வாழ்விலேற்பட்ட படிப்படியான மாற்றங்களேயாகும்.

மாற்றம்மடைந்த மனிதனிடம் விலங்கின் தன்மைகள் முழுமையாக விட்டு நீங்கவில்லை என்பதைத் தக்க சமயத்தில் காணக்கூடியதாக இருக்கிறது. உணர்ச்சி மேலிட்டு நிற்கின்ற பொழுது மனிதனால் செய்யப்படுகின்ற ஆக்ரோமான நடவடிக்கைகள் – இன்னும் மனிதனிடமிருந்து மிருக இயல்புகள் மறையவில்லை என்பதையே காட்டி நிற்கின்றன எனலாம்.

அந்த இயல்புகளை மாற்றி மனிதனை மனிதனாகவும், அந்த மனிதனைப் புனிதனாகவும் மாற்றும் தன்மைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டதாக இந்துமதம் திகழ்வதால் அது ஒரு வாழும் நெறியாக விளங்குகிறது எனலாம்.

மதங்களும், மதங்கள் வகுத்த கடவுள் கோட்பாடுகளும் மனிதனைப் புனிதம் மிக்கவனாக மாற்றுவதற்கே அன்றி, அவனை அடக்கி, ஒடுக்கி வைப்பதற்கு அல்ல. மதங்களும் அவற்றின் கொள்கைகளும், மனிதன் தன் வாழ்வில் முன்னேற்றம் கொள்ளவும், அவனுள் தூய்மையை ஏற்படுத்தவுமே அமைந்தன.

ஆனால், சில மதங்கள், மனித சமுதாயத்தை அடக்கி ,ஒடுக்கி, வைக்க முனைகின்றன. சர்வாதிகாரப் போக்குடையனவாகவும் காணப்படுகின்றன. செய் அல்லது செத்துமடி என்னும் இராணுவத் தோறணை கொண்டனவாகவும் இருகின்றன. சமயமாக இல்லாமல் சர்வாதிகாரம் கொண்டனவாக மாற முற்படுகின்றன.

இவற்றுக்கு மத்தியில் இந்துமதமோ மாறுபட்டு, வேறுபட்டு நிற்கிறது. பூரண சுதந்திரம் கொண்டதாக இந்துமதம் விளங்குகின்றது. இந்து மதத்தவர்கள் அம்மதத்தை விட்டுச் சென்றாலும் சரி, வேறு மதத்தவர்கள் இந்துமதத்தில் இணைந்தாலும் சரி அதையிட்டு இந்துமதம் கண்டு கொள்ளுவதேயில்லை.

கடலினுள் பல இடங்களிலிருந்து வரும் ஆறுகள் கலக்கின்றன. அந்த ஆறுகள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி கடல் ஒரு போதும் கவலைப்படுவதே இல்லை. வருகின்ற ஆறுகளை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுவதைப் போன்று, பரந்து விரிந்த கடலாக விளங்கும் இந்துமதமும் வருவோரையெல்லாம் மகிழ்வோடும் பரிவோடும் அணைத்துக் கொள்ளும் அன்பும், சகிப்புத் தன்மையும் கொண் டிருப்பதனால்தான் அது என்றும் ஒரு வாழும் நெறியாக இருக்கின்றது.

வாழ்க்கையை எப்படி வாழலாம் என்பதற்கு இந்துமதம் பல படிமுறைகளைக் காட்டுகின்றது. பிமச்சாரியாக, கிரகஸ்த் தனாக, வானப்பிரசஸ்தனாக, சன்னியாசியாக வாழலாம் என்று காட்டி நிற்கிறது. நடைமுறைக்கு இது ஏற்கக் கூடயது எனப் பெரியவர்கள் இன்று கருது கின்றனர். இல்லறவாழ்வில் ஈடுபட முன்பு ஒருவன் மாணவனாக இருந்து கல்வி கற்கவேண்டும். மாணவப்பருவம் பிரமச்சாரியத்துக்கு உரியது என்பதை எவரும் மறுக்கமுடியாதல்லவா?

கற்றுத் தேர்ந்த பின் நல்ல மனவியாகத் தேர்ந்தெடுத்து வாழுதல் கிரகஸ்தம் ஆகிறது. கற்று முடித்தபின் இல்லறத்தில் ஈடுபடும் பொழுது வாழ்வு பயனுடையதாக அமையும் அல்லவா? பொருள் ஈட்டவும், தானதர்மம் செய்யவும் , மக்கட் செல்வங்கள், உற்றார் உறவினருடன் இசைந்து வாழவும் இல்லறமாகிய நல்லறம் பொருத்தமானதாக இருக்கு மல்லவா ?

இல்லற இன்பத்தில் திளைத்து, பின் வாழ்வின் நெளிவு சுழிவுகளை நன்றாக உய்த்து உணர்ந்த பின், மனம் துறவையே நாடுவது இயல்பான ஒன்றே. இதுவே உண்மையான முதிர்ச்சியும் கூட. எனவே, இல்லறமாம் நல்லறத்தின் நிறைவில் ஏற்படுவது துறவறம் ஆகிறது.

மனித வாழ்வை மிகவும் நுட்பமாக மதிப்பீடு செய்து, அதற்கான பருவங்களையும் அடையாளம் கண்டு, அதன்படி வாழும் நிலைகளில் என்னென்ன கடமைகளை எல்லாம் ஆற்றவேண்டும் மென்பதையும் வகுத்து வைத்து, வாழ்க்கையை வாழ



விழைபவர்களுக்கு காட்டி நிற்கிறது இந்துமதம். இதனால்தான் இது வாழும் நெறி எனப் போற்றப் படுகின்றது,

இல்லற வாழ்வை இந்துமதம் பெரிதும் போற்றுகின்றது. இல்லற வாழ்வில் பெண்ணின் இடம் மிகவும் உன்னதமானதாகும். பெண்ணைப் போற்றாத எந்த ஓர் அமைப்பும் உயிரோட்டம் உள்ளதாக இருக்க மாட்டாது. இதனை நன்குணர்ந்த காரணத்தால் – பெண்மைக்கு உயரிய இடத்தை இந்துமதம் வழங்கியிருக்கிறது எனலாம்.

பெண்மையென்றால் – மென்மையும், பொறுமையும், அன்பும், அரவணைப்பும், பாசமும், நேசமும் மிக்கதென்பதே கருத்தாகும். இவையனைத்தையும் கொண்டதாக இறைத்தன்மையும் இருக்கின்றது. இதனால்தான் பெற்றதாயை தெய்வமாகப் போற்றும் நிலையை இந்து மதம் தன்னுள் கொண்டிருக்கின்றது.

பெண்மையைத் தெய்வமாக்கிய பெருமையை இந்துமதம் எடுத்துக் கொள்கிறது. கல்வி, செல்வம், வீரம், இம்மூன்றும் எந்தமொழி, எந்தநாடு, எந்த இனம் என்று இல்லாமல் யாவருக்கும் தேவையானவையே. அது மட்டுமல்ல, இவை மூன்றும் இல்லாவிட்டால் முழுமை என்பதற்கே அர்த்தம் இல்லாது போய்விடும். அடிப்படையான அத்தியாவசியமான இம் மூன்றையும் தருகின்ற கடவுள் சக்தியாக சரஸ்வதி, லக்ஷமி, துர்க்கை எனப் பெண்மையையே உருவகப்படுத்திக் காட்டிய இந்துமதம் உண்மையிலேயே சிறந்த ஒரு வாழும் நெறிதான் என்பதை மறுக்கமுடியாது.

கல்வி,செல்வம்,வீரம், இவற்றை நினைத்தவுடன் பெற்றுவிட முடியாது. இவற்றைப் பெறுவதற்கு மிகுந்த பொறுமை வேண்டும். பல சோதனைகளை,வேதனைகளைத் தாங்க வேண்டும். சில தியாகங்களைச் செய்ய வேண்டும். தன்னம்பிக்கை நிறையவே வேண்டும். இவை யாவும் பெண்களிடம் நிறைந்து காணப்படுவதால்தான் பெண்மை தெய்வீகம் ஆக்கப்பட்டது.

இந்துமதம் இல்லறத்தைப் போற்றுகின்ற போதும், துறவறத்தையும் ஒதுக்கிவிட வில்லை. இல்லற இன்பம் நிறைவு பெறும் நிலைவந்ததும், துறவறம் என்னும் ஒரு நிலையும் இருக்கிறது என்று இந்துமதம் காட்டுகிறது. இல்லற வாழ்வில் ஈடுபட விருப்பம் இல்லாவிட்டால் துறவறத்தைத் தேர்ந்தெடுத்து அதன்படியும் நடக்கலாம் என்றும் வழிகாட்டி நிற்கிறது. துறவறம் தான் கட்டாயம் என்றோ, இல்லறந்தான் கட்டாயமென்றோ வற்புறுத்தவில்லை. இரண்டையும் காட்டி விரும்பியதை வாழ்க்கை ஆக்கிக் கொள் என்னும் சுதந்திரத்தை இந்துமதம் வழங்கி நிற்கிறது.

உயிர்வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பது இதனை வலியுறுத்தி நிற்கின்றது. இந்துமதம் பலவிதமான தர்மங்களைக் காட்டி நிற்கிறது. அவற்றில் அன்றும் இன்றும் என்றுமே தலையான தர்மம் அன்னம் இடுதலேயாகும். எந்தத்தானத்தைச் செய்தாலும் அதனைப் பெற்றுக் கொண்டவர்கள் திருப்தியை வெளிப்படுத்துவதில்லை. ஆனால் அன்னத்தைப் பெற்று தனது பசியினைப் போக்கியவர்கள் மட் டுமே, உலகில் மனமாரத் திருப்தி அடைந்து மகிழ்ச் சியுடன் போதும் என்று வாய்விட்டுச்சொல்லி நிற்பார்கள். இதனால்தான் அன்னதானத்தைச் செய்வது மேலானது என இந்து மதம் சொல்லுகிறது. இது ஒரு சிறந்த வாழும் நெறி அல்லவா ?

குடும்ப உறவு வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. தாய் தந்தை, மகன் ,மகள், மாமா மாமி, மைத்துனன் எனக் குடும்ப உறுப்பினர்கள் நமது வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கின்றனர். இப்படியான உறவு நிலைகளை இந்துமதம் மிகவும் நுட்பமாகக் கடவுள் கொள்கையுடன் இணைத்துவிட்டது.

கடவுளை வழிபடுகின்ற பக்தன் கடவுளை – தாயாக , தந்தையாக, நண்பனாக, காதலனாக, காதலியாக, குழந்தையாக, நினைந்து வழிபடுகின்ற பொழுது அவனது மனம் இறை அருளில் ஒன்றி விடுகிறது.

சிவன் தந்தையாகவும், பார்வதி தாயாகவும், விநாயகரும் முருகனும் அவர்களது பிள்ளைகளாகவும்,பிரம்ம, விஷ்ணு , இந்திரன் உறவினராயும், தேவர்கள் ஏனைய உறவுகளாகவும் நண்பர்களாகவும் இந்துமதம் கடவுளையே குடும்பத்துக்குள் கொண்டு வந்து விட்டது. இந்தச் செயற்பாடானது பார்ப்பதற்கு வேடிக்கையாகவும் விநோதமானதாகவும் இருக்கும். ஆனால் இதனை வேடிக்கை என்று எடுத்துக் கொள்ளல் கூடாது.

ஆண்டவன் என்பவன் யாராலும் அணுகமுடியாதவன் அல்லன். அன்பும் ,பாசமும், அரவணைப்பும் கொண்ட குடும்ப உறுப்பினன் போன்றவனே ஆண்டவன். அவனை அடைய, அவன் அருளைப் பெற அன்பும், பொறுமையும், தயாளமும், தர்மமும், சகிப்புத்தன்மையும், பாசமும் அவசியம். அவை உள்ளத்தில் ஏற்படுமானால் நிச்சயமாக ஆண்டவனைக் காணமுடியும் என்னும் உயர்ந்த தத்துவத்தை யாவருக்கும் விளங்கப. பண்ணுவதற்கே இந்துமதம் குடும்ப உறவை இறைவனுடன் இணைத்தது என்பது மிகவும் கவனிக்கப் படவேண்டிய வியமாகும்.

நாளாந்தம் நாம் கைக்கொள்ளும் நடைமுறைகள் அத்தனையிலும் இந்துமதம் தன்னை உள் நுழைத்துக் கொண்டுள்ளது. உண்பது தொடக்கம் உறங்குவதுவரை இந்துமத நெறிகள் பரவிக் கிடப்பதைக் காணலாம்.

இந்து மதத்தில் மிகவும் முக்கியமானது ஆசாரமாகும். ஆசாரம் என்றால் என்ன? ஆசாரம் என்றால் சுகாதாரம் என்பதுதான் கருத்து. உடலையும் சுத்தமாக வைத்திரு. உள்ளத்தையும் சுத்தமாக வைத்திரு. இதுதான் இந்துமதத்தின் அடிப்படை வாழும் நெறி எனலாம். இதற்குப் பலவிதிமுறைகளை இந்துமதம் வைத்திருக்கிறது. இவற்றையெல்லாம் எவரும் உலகத்தில் கடைப்பிடிக்கலாம்.

( 13 ஆம் பக்கம் பார்க்க)

# இரணைதீவில் விரைவில் புதிய கடலட்டைக் கிராமம்!

## 350 பேருக்கு வேலைவாய்ப்பு வருடாந்தம் 3 கோடி வருமானம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

இரணைதீவில் கடலட்டைக் கிராமம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு துறைசார் அதிகாரிகளுக்கு கடற்றொழில் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

இரணைதீவை அண்டிய கடல் பிரதேசத்தில சுமார் 60 ஹாக்ரேயர் விஸ்தீரமான கடலட்டை வளர்ப்புக்கு பொருத்தமான சூழல் இருப்பது ஆய்வுகளின் மூலம் கண்றியப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்குறித்த அறிவுறுத்தலை துறைசார் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மக்கள் அண்மையில் இரணைதீவில் மீளக் குடியேறியிருந்தனர். எனினும், கடற்றொழில் நம்பி வாழுகின்ற இரணைதீவு மக்களின் புனர்வாழ்வுக்கு கடந்த அரசால் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் அந்த மக்களின் பிரச்சினைகள் கடற்றொழில் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, இரணைதீவு கடல் பிரதேசத்தின் சூழலியல் தன்மைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி, கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல் உயிரியல், கடற்படுக்கை மற்றும் சூழலியல் ஆய்வாளர்கள் கொண்ட குழுவினர் நேரடியாக இரணைதீவு பிரதேசத்திற்கு விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டதன் அடிப்படையில் கடல் வளர்ப்புக்கு உகந்த பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசத்தில் கடலட்டை கிராமம் உருவாக்கப்படும் பட்சத்தில் இணைதீவில் மீளக் குடியேறியிருக்கும் மக்களின் மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய மாற்றத்தை அது ஏற்படுத்தும் .

குறிப்பாக அடையாளப்படுத்தப்பட்ட அந்தப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள கடலட்டைக் கிராமத்தின் மூலம் 350க்கும் மேற்பட்ட இரணைதீவு மக்கள் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதோடு வருடாந்தம் சுமார் 3 கோடி ரூபா வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள முடியும் என்று துறைசார் நிபுணர்களினால் மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# செங்குந்தா பொதுச் சந்தை புனரமைக்கப்பட்டு திறப்பு







யாழ்ப்பாணம், டிசெ. 20

கல்வியங்காடு செங்குந்தா பொதுச் சந்தை புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபையால் புனரமைக்கப்பட்ட இந்தச் சந்தையை மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் திறந்து வைத்தார்.

மாநகர முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அதிகாரிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ - 07)

# கிளிநொச்சியிலும் வர்ணம் தீட்டும் பணி





கிளிநொச்சி, டிசெ. 20

நாடளாவிய ரீதியாக பல்வேறு மாவட்டங்களில் தங்கள் மாவட்டத்தை அழகுபடுத்தும் நோக்கோடு இளைஞர் குழுக்கள் இணைந்து வர்ணம் பூசும் வேலைகளைச் செய்து வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலும் நேற்றுமுன்தினம் சுயாதீன இளைஞர் குழுவொன்று வர்ணம் பூசும் பணிகளை ஆரம்பித்துள்ளது. கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்தை சுத்தம் செய்து வர்ணம் பூசுவதற்கான ஆயத்த வேலைகளை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சியிலும் வர்ணம் தீட்டும் பணிகள் தொடர்ந்து நடைபெற இருப்பதால் மாவட்டத்தில் அக்கறை உள்ள இளைஞர்கள், யுவதிகளை இந்த வர்ணம்பூசும்பணியில் இணைந்து கொள்ளுமாறு கிளிநொச்சியின் சுயாதீன இளைஞர் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

# விவசாய அமைச்சு அலுவலகத்தை இடமாற்ற அமைச்சரவை அனுமதி

ராஜகிரியவில் அமைந்துள்ள விவசாய அமைச்சின் அலுவலகத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள கொவிஜன மந்திரய என்ற கட்டடத்துக்கு இடமாற்றம் செய்ய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியளார் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவை இணை ஊடகப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று இதனைத் தெரிவித்தார்.

விவசாய இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவால், இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக அவர் கூறியுள்ளார். (ஐ)

# காணாமல்போனோரைத் தேடி உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி!



வடக்கு, கிழக்கின் 08 மாவட்டங்களிலும் கடந்த 10 வருடங்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி, வீதிகளில் போராட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில், உயிர் நீத்த தாய்மார்கள், உறவினர்கள் 58 பேருக்கான ஆத்ம சாந்தி வேண்டி அஞ்சலிகள் செலுத்தப்பட்டன.

இந்த அஞ்சலி நிகழ்வு, அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில், திருக்கோவில், தம்பிலுவில் பொதுச் சந்தைக் கட்டடத்துக்கு முன்பாக கடந்த செவ்வாய் நடைபெற்றது. இதில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது, தம்பிலுவில் சந்தைக் கட்டடத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க அலுவலகத்துக்கு முன்பாகப் பேரணி ஆரம்பமாகிப் பேரணியாக திருக்கோவில் தபால் நிலையம் வரைச் சென்று மீண்டும் தமது அலுவலத்தைப் பேரணி வந்த டைந்ததுடன் அங்கு 58 மெழுகுவர்த்திகள் ஏற்ற உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலிகள் செலுத்தப் பட்டு இருந்தன. (ஐ)





# தேசியத்தில் சாதித்தனர் மகாஜனாவின் மகளிர்!

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயது பெண்கள் உதைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மகாஜனக் கல்லூரி மற்றும் பராக்கிரமபாகு மத்திய மகாவித்தியாலய அணிகள் மோதின. ஆட்ட நேரமுடிவில் தெல்லிப்பளை மகாஜனா பெண்கள் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று தேசிய சம்பியனாகியது

மகாஜானாவின் வெற்றிக் கோலை தேசிய அணி வீராங்கனை சானு பெற்றுக்கொடுத்தார்.

இந்தப் போட்டி நேற்று முற்பகல் 11 - 00 மணியளவில் கொழும்பு சிற்றிலீக் உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்றது. (ஐ)

## பந்துவீச்சாளர்கள் மிரட்டல்:

# அபார வெற்றியை பெற்றது இந்தியா

இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 107 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது ஒருநாள் போட்டி, சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய




அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ரோஹித் சர்மா மற்றும் ரோகேஷ் ராகுல் ஆகியோர் 227 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றுக் கொடுத்தனர்.

இந்நிலையில், 3 ஆறு ஓட்டங்கள் மற்றும் 8 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 102 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேற, அணித்தலைவர் விராட் கோஹ்லி ஓட்டமெதுவும் பெறாமல் முதல் பந்திலேயே ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தார்.

இதையடுத்து களமிறங்கிய ஸ்ரேயஸ் ஐயர் 53 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க ரிஷப் பந்த் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதனிடையே 6 ஆறு ஓட்டங்கள் மற்றும் 17 நான்கு ஓட்டங்கள் உள்ளடங்கலாக 159 ஓட்டங்களைப்பெற்று ரோஹித் சர்மா ஆட்டமிழந்து வெளியேறினார்.

இந்நிலையில் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 387 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் மேற்கிந்திய தீவுகள் அணி சார்பாக, ஷெல்டன் ஹொற்ரெல் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அத்துடன், கீமோ போல், அல்ஷாரி ஜோசப் மற்றும் பொல்லார்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், 388 என்ற கடினமான வெற்றியிலக்கை நோக்கி மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியது.

இதன்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி, இந்திய அணியின் பந்துவீச்சாளர்களின் மிரட்டலுக்கு மத்தியில் 43.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 280 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இதனால் 107 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக, ஷை கோப் 78 ஓட்டங்களையும், நிக்கோலஸ் பூரான் 75 ஓட்டங்களையும், கீமோ போல் 46 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் மொஹமட் ஷமி மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். அத்துடன், ரவீந்திர ஜடேஜா 2 விக்கெட்டுகளையும் ஷர்தல் தாகுர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் மூன்று ஒரு போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றிகளைப் பெற்று 1:1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஒடிசாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சங்கா தலைமையில் மெர்லிபோன் கழகம் பாகிஸ்தானுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம்



குமார் சங்கக்கார தலைமையிலான மெர்லிபோன் கிரிக்கெட் கழகம், பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதன்மூலம், சுமார் 10 வருடங்களுக்கு பிறகு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான குமார் சங்கக்கார பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளார்.

2009 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி மீது லாகூரில் வைத்து நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் போது, பேருந்தில் பயணித்த வீரர்களில் சங்கக்காராவும் உள்ளடங்குகின்றார். அந்தச் சமயத்தில் சங்காவுக்கு சிறிய காயமும் ஏற்பட்டது.

அதன் பின்னர், இன்றுவரை சங்கக்காரா பாகிஸ்தான் சென்றதில்லை. இந்நிலையில், 10 வருடங்களின் பின்னர் அவர் பாகிஸ்தான் செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், மெர்லிபோன் கிரிக்கெட் கழகம், பாகிஸ்தானுக்கு செல்வதன் மூலம் சுமார் 46 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த கழகம் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதன்போது, பாகிஸ்தான் செல்லும் மெர்லிபோன் கிரிக்கெட் கழகம், லாகூரில் இடம்பெறும் போட்டிகளிலும் பங்கேற்கவுள்ளது.

மெர்லிபோன் கிரிக்கெட் கழகத்தின் நீண்டகால நோக்கத்தின் ஒரு பகுதியாக, இந்த சுற்றுப்பயணம் அமையவுள்ளது.

இதுகுறித்து மெர்லிபோன் கிரிக்கெட் கழக தலைவர் குமார் சங்கக்கார கூறுகையில், 'பாகிஸ்தான் போன்ற நாடுகளில் கிரிக்கெட்டை ஆதரிப்பது மிகவும் முக்கியமானது, மேலும் 2009ஆம் ஆண்டின் துயரமான சம்பவங்களுக்குப் பின்னர் சர்வதேச கிரிக்கெட்டை அங்கு கட்டியெழுப்புவது குறித்து மெர்லிபோன் கிரிக்கெட் கழகம் அவதானம் செலுத்தி வருகின்றது. பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தில் மெர்லிபோன் கிரிக்கெட் கழக தலைவராக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒரு தசாப்தத்தில் முதல் முறையாக சர்வதேச கிரிக்கெட் திரும்பிய நிலையில், பாக்கிஸ்தானில் கிரிக்கெட்டை வலுப்படுத்த கழகம் தனது பங்கைச் செய்வது அற்புதம்' என கூறினார்.

இதற்கு முன்னதாகவும் மெர்லிபோர்ன் கிரிக்கெட் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக குமார் சங்கக்கார குரல் கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மெர்லிபோர்ன் கிரிக்கெட் கழகத்தின் முயற்சியின் பின்னர், சர்வதேச அணிகள் பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2009ஆம் ஆண்டு லாகூர் தாக்குதலுக்கு பின்பதாக ஆறு வருடங்கள் பாகிஸ்தானுக்கு சென்று எந்தவொரு சர்வதேச அணியும் விளையாடவில்லை. பின்னர், சிம்பாப்வே அணி 2015ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் விளையாட முதல் தடவை பாகிஸ்தான் சென்றிருந்தது.

அதன் பின்னர் 2017இல் உலகப் பதினொருவர் அணியும், 2018 இல் மேற்கிந்திய தீவுகள் அணியும், அண்மையில் இலங்கை அணியும் அங்கு சென்று விளையாடின, அதுமட்டுமல்லாது, கடந்த இரண்டு வருடங்களாக பாகிஸ்தான் சுப்பர் லீக்கின் இறுதிப் போட்டியும் பாகிஸ்தானில் இடம்பெற்றது. இதில் பல வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்றிருந்தனர்.

தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நீண்ட போராட்டத்திற்கு இலங்கை அணி 10 வருடங்களுக்கு பிறகு பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தற்போது டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகின்றது.

# சிட்னி சிக்ஸர்ஸ் அபார வெற்றி!



பிக் பேஷ் ரி - 20 தொடரின் இரண்டாவது லீக் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

2019 - 2020ஆம் ஆண்டு பருவக்காலத்துக்கான பிக் பேஷ் ரி -20 தொடர், தற்போது ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன் தினம் நடைபெற்ற தொடரின் இரண்டாவது லீக் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணியும், பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணியும் பலப் பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிட்னி சிக்ஸர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பெர்த் ஸ்கொர்சர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கெமரோன் கிறீன் 36 ஓட்டங்களையும், மிட்செல் மார்ஷ் 32 ஓட்டங்களையும், ஜோஷ் இங்லிஷ் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் பந்துவீச்சில், டொம் கர்ரன் 3 விக்கெட்டுகளையும், பென் துவார்ஷூயிஸ் மற்றும் பென் மானென்டி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஸ்டீவ் ஓகீப் மற்றும் சீன் அபோட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து, 132 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, 15 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் அந்த அணி 8 விக்கெட்டுகளால் அபார வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஷ் பிலீப்பே 81 ஓட்டங்களையும், டேனியல் ஹியூஜ்ஸ் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில், கிறிஸ் ஜோர்தான் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 44 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 11 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட ஜோஷ் பிலீப்பே தெரிவு செய்யப்பட்டார்.

# பிரபல பாடசாலைகளுக்கான வெட்டுப்புள்ளி வெளியானது

யாழ்ப்பாணம்,டிசெ. 20

2019 ஒகஸ்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் பிரபல பாடசாலைகளில் தரம் 6 இல் மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி **தமிழ்மொழி ஆண்கள் பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு: -**

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி – 169
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி – 156
மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி – 167
மன்னார் சென்.சேவியர் ஆ.ம.ம.வி – 154
திருகோணமலை சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி – 154
கொழும்பு இந்துக் கல்லூரி – 154
மட்டக்களப்பு சிவானந்தா வித்தி. – 153
மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரி – 153

**தமிழ்மொழிமூல பெண்கள் பாடசாலைகளின் வெட்டுப்புள்ளி விவரம் வருமாறு: -**

பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை – 167
மட்டக்களப்பு வின்ஸ்சன்ட் பெண் உயர்தரப் பாடசாலை – 165
திருகோணமலை சிறிசண்முகா இந்து மகளிர் கல்லூரி – 165
யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை – 162
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி – 158
மட்டக்களப்பு சென்.செசிலியா மகளிர் கல்லூரி – 155
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி – 153
மன்னார் சென்.சேவியர் மகளிர் கல்லூரி – 152
வவுனியா சிவப்பிரகாசம் மகளிர் கல்லூரி – 152
தமிழ்மொழிமூல கலவன் பாடசாலைகள்
நெல்லியடி மத்திய கல்லூரி – 158
கொக்குவில் இந்துக் கல்லூரி – 156
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி – 155
சாவகச்சேரி இந்துக் கல்லூரி – 153
வவுனியா தமிழ் மகா வித்தி. – 152

(ஐ – 07)

# சட்டவிரோத படகுகளைத் தடுக்க ஜோதிடத்தை பயன்படுத்தும் ஆஸி.







கொழும்பு, டிசெ. 20

சட்டவிரோதமாகப் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்லும் இலங்கையர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு, ஆஸ்திரேலிய உள்துறை அமைச்சு வித்தியாசமான விளம்பர முயற்சியில் இறங்கியுள்ளது.

புகலிடம் கோரும் இலங்கையர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு, ஜோதிடத்தைப் பயன்படுத்தி, இந்த வித்தியாசமான விளம்பர யுக்தியை ஆஸ்திரேலியா முன்னெடுத்துள்ளது.

ஒவ்வொரு ராசிக்காரர்களும் சட்டவிரோதமாக ஆஸ்திரேலிய வர முனைந்தால் இது தான் நடக்குமென எதிர்வுகூறும் வாசகங்கள் இந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஜாதகத்தில் தோஷத்துடன் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா வரும் இலங்கையர்களுக்கு குடும்பப் பிரச்சினை ஏற்படலாம், குற்ற உணர்வு தலை தூக்கலாம், வாழ்க்கை முழுதும் கடன் சுமையால் அவதிப்படலாம் என்றெல்லாம் பல்வேறு தொல்லைகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஐ)

# மகாநாயக்கர்களிடம் முறையிட்ட சம்பிக்க



கொழும்பு, டிசெ. 20

தனது அரசியல் வாழ்க்கையைக் கெடுப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கொழும்பு குற்றப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்படுவதற்கு முன்னர், மகாநாயக்க தேரர்களிடம் சம்பிக்க ரணவக்க முறையிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கல தேரரையும், அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்கர் திம்புல்கும்புர சிறி விமலதர்ம தேரரையும், நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க சந்தித்தார்.

இதன் போது தனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அரசியல் சூழ்ச்சி தொடர்பாக முறையிட்டுள்ளார்.

சந்திப்புகளுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சம்பிக்க ரணவக்க –

தொடர்ச்சியான ஊடகப் பரப்புரையின் மூலம் எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் முயற்சிகள் நடப்பது குறித்து மகாநாயக்கதேரர்களுக்குத் தெரிவித்தேன்.

அரசு எனக்கு எதிரான ஆதாரங்களைத் தயாரித்து என்னைக் கைது செய்யலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஒரு விபத்து பற்றி அவர்கள் பேசுகிறார்கள். எனது வாகனம் ஒரு இளைஞன் மீது மோதியதாக அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், அதிவேகத்தில் பயணித்த அந்த வாகனம், மெதுவாக நகர்ந்த வாகனத்துடன் மோதியது.

அரச பகுப்பாய்வாளரின் அறிக்கையைப் பார்த்த பின்னர், சாரதிக்கு அபராதம் விதித்த நீதிமன்றம் அவரை விடுவித்தது.இந்த வழக்கை மீண்டும் கொண்டு வர எந்தக் காரணமும் இல்லை.

அரசு எனது சாரதியை பயமுறுத்த முயற்சிக்கிறது, என்னைக் கைது செய்யும் முயற்சியில் அவரது குடும்பத்தினரைத் துன்புறுத்துகிறது.

விசாரணையை நான் பொருட்படுத்தவில்லை, ஆனால் அது சரியாகச் செய்யப்படவேண்டும் என்று நான் விரும்புகிறேன் – என்று கூறினார்.

அதேவேளை மகாநாயக்கர்களைச் சந்தித்து விட்டு வீட்டுக்கு வந்ததை அடுத்தே, சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டார்.

(ஐ)

# வடக்குக் கடலில் பொதிகளில் மிதந்து வந்த கேரளக் கஞ்சா!





யாழ்ப்பாணம்,டிசெ. 20

யாழ்ப்பாணம் மயிலிட்டி மற்றும் வல்வெட்டித்துறை இடையேயான கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் பெருமளவு கேரளக் கஞ்சாப் பொதிகளைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

முன்னதாக மயிலிட்டி மற்றும் வல்வெட்டித்துறைக் கடற்பரப்புக்கிடையில் மூன்று பொதிகள் அடங்கிய கேரளக் கஞ்சாவை கடற்படை கைப்பற்றியிருந்தது.இதனையடுத்து வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் மிதந்து சென்ற ஐந்து பார்சல்கள் அடங்கிய கேரளக் கஞ்சாவை கடற்படை மீட்டது.

இவை ஒவ்வொன்றும் 70 கிலோ நிறையுடையவை என்றும் 15 சிறிய பொதிகளில் சுற்றப்பட்டிருந்தன எனவும் கடற்படை தெரிவித்தது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மேலதிக விசாரணைகளுக்காக அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டது.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் எவரும் கைது செய்யப்பட்டதான தகவலை கடற்படை தெரிவிக்கவில்லை.



# கோட்டாவின் செயலாளராக முன்னாள் கடற்படைத் தளபதி

கொழும்பு, டிசெ. 20

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது வெளியுறவுகளுக்கான மேலதிகச் செயலாளர் பதவிக்குச் சர்வதேச உறவுகளில் நிபுணரான அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகேவை நியமித்துள்ளார்.

இந்தத் தகவலை ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அட்மிரல் கொலம்பகே இலங்கைக் கடற்படையில் 36 வருடங்கள் சேவையாற்றி, 2014ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி கடற்படை தளபதியாக ஓய்வு பெற்றார். அட்மிரல் கொலம்பகே இலங்கை கடற்படையின் 18ஆவது தளபதியாவார். கடற்படையில் அவர் ஆற்றிய சேவைகளுக்காக பல்வேறு விருதுகளையும் பஜூராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

கடற்படையிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பாத்பைண்டர் நிறுவனத்தில் இந்திய – இலங்கை முன்னெடுப்புகள் மற்றும் கடல் மைய சட்டத் துறைக்கான பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார். இந்நிறுவனம் கொழும்பை மையமாகக்கொண்ட ஒரு முன்னணி சிந்தனை மற்றும் ஆய்வு நிலையமாகும்.



அட்மிரல் கொலம்பகே பாத்பைண்டர் நிறுவனத்தையும் இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுகளை முன்வைத்துள்ளார். மேலும் சர்வதேச அரசியல், மூலோபாயம் மற்றும் கடற் பாதுகாப்பு துறைகள் தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்களில் பங்கு பற்றியுள்ளதுடன், பல கூட்டத்தொடர்களுக்கு தலைமை வகித்துள்ளார்.

பேராசிரியர் அட்மிரல் கொலம்பகே இலங்கை, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுக ளில் பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களில் சிறப்பு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். அவர் சர்வதேச ரீதியாக புகழ் பெற்ற பல்வேறு கல்வி சஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

அட்மிரல் பேராசிரியர் கொலம்பகே சேர் ஜோன் கொத்தலாவல பல்கலைக் கழகத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றுள்ளமையுடன், சென்னைப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு மற்றும் மூலோபாய கற்கைகளில் விஞ்ஞான முதுமாணிப் பட்டத்தையும் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் சர்வதேச கற்கைகள் துறையில் முதுகலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். அவரது கலாநிதி பட்டத்திற்கான ஆய்வு ஜேர்மனியிலுள்ள லம்பேட் கல்வி வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

அவர் லண்டன் கடல்சார் நிறுவனத்தின் ஓர் உறுப்பினருமாவார் – என்றுள்ளது. (ஐ)

# வலி. வடக்கில் கழிவுகளை கொட்டத் தடை



வலிகாமம் வடக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் உள்ள வீதியோ ரங்களில், கழிவுப் பொருள்களைக் கொட்டத் தடை விதிக்கப்பட்டுள்ள தாக வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

இது குறித்து தெரிவித்த அவர், மேலதிகக் கழிவுகளை அகற்றுவதற்கு, தமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்ட ணத்தை செலுத்தினால், பொது மக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களது மேலதிகக் கழிவுகள் அகற்றப்படும் – என்றார்.


விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத்தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப்பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுத்துப்பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத்தரப்படும்.

THE SASIKA LEARNERS

முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.



வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

சசிகா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
DS NO - 882

தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE: 077 722 6247
0212217678,
0776140361
sasika Learners
sasika driving Schoolgmail.com.

கிளை நிறுவனங்கள்:

வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
0212215472
0703013012

காரைநகர்
021 225 2454,
070 510 2484

கே.கே.எஸ். வீதி, மல்லாகம்
021224 3393
0703013014

பண்டத்தரிப்பு
021 225 2333,
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021225 1664
0703013016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
0212215472
0703013012

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2019 இல் வெளியிடப்பெற்றது.




# சம்பிக்கவின் கைதுக்கு வேலுகுமார் கண்டனம்

கொழும்பு, டிசெ. 20

நல்லாட்சியால் நிலைநாட்டப்பட்ட சட்டத்தின் ஆட்சியானது மீண்டும் காட்டாட்சி யுகத்தை நோக்கிப்பயணிக்கஆரம்பித்துள்ளதுஎன்பதையே முன்னாள் அமைச்சர் சம்பிக்கவின் கைது எடுத்துக்காட்டுவதாகஜனநாயகமக்கள்முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் அமைச்சர் சம்பிக்கவுக்கு எதிரான கைது வேட்டையானது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையென சுட்டிக்காட்டியுள்ள வேலுகுமார் எம்.பி., அதனை வன்மையாகக் கண்டித்து நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

சம்பிக்க ரணவக்க குற்றமிழைத்திருந்தால் அவருக்கு எதிராக உரிய வகையில், உரிய நடைமுறைகளை பின்பற்றியே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவ்வாறு நடைபெற்றிருந்தால் அதில் எவரும் தலையிட்டிருக்க மாட்டார்கள்.

எனினும், ஜனாதிபதி தேர்தலின்போது ராஜபக்ஷ தரப்பைக் கடுமையாக விமர்சித்த சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக திட்டமிட்ட அடிப்படையிலேயே கைது வேட்டை அரங்கேற்றப்பட்டுள்ளது. அவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால் கைது செய்வதாக இருந்தால் முன்கூட்டியே சபாநாயகருக்கு அறிவிக்கவேண்டும், நீதிமன்றத்தின் அனுமதியும் பெறப்படவேண்டும். இந்த நடைமுறைகளை பின்பற்றாமல் அடாவடித்தனமாகவே பொலிஸாரை ஏவிவிட்டு சம்பிக்க பழிதீர்க்கப்பட்டுள்ளார்.

இந்த ஜனநாயக விரோத – அரச அடக்குமுறை செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதுடன், இதற்கு எதிராக அறவழியில் போராட்டங்களை முன்னெடுப்போம்.

மஹிந்த ஆட்சிகாலத்தில் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த ஜனநாயகத்தை 2015 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசே பாதுகாத்து – புத்துயிர் கொடுத்தது. அத்துடன், சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு, கொடுங்கோல் ஆட்சிக்குபதிலாக – மக்களாட்சி நடத்தப்பட்டது. நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது.

எமது ஆட்சிகாலத்தில் கைது நடவடிக்கைகள் கூட சட்டத்தின் பிரகாரமே இடம்பெற்றன. அரசியல் அழுத்தங்கள் இருக்கவில்லை. கோட்டாபயவின் அரசு இன்று செய்வதை நாம் அன்று செய்திருந்தால் மஹிந்த அணியிலுள்ள பலர் இன்றும் சிறைச்சாலைக்குள்தான் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

எவராவது குற்றம் இழைத்திருந்தால் நிச்சயம் தண்டனை வழங்கப்பட வேண்டும். நாம் அதற்கு எதிரானவர்கள் அல்லர். சட்டம், ஒழுங்கை மதிக்கின்றோம். எனினும், அவை உரிய வகையில் இடம்பெறவேண்டும்.

எனவே, பழிவாங்கல் அரசியலைக் கைவிடுத்து, நல்லாட்சியால் நிலைநாட்டப்பட்ட சட்டத்தின் ஆட்சியைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு புதிய அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆனால், மீண்டும் காட்டாட்சியை ஏற்படுத்தி இருண்ட யுகத்தை நோக்கி பயணிக்கவே ராஜபக்ஷ தரப்பு முயற்சிக்கின்றது என்பதையே அண்மைக் காலச் சம்பவங்கள் எடுத்துகாட்டுகின்றன. சிங்கள, பௌத்த மக்களின் ஆதரவை பெற்ற சம்பிக்க கைது செய்யப்பட்டதுகூட இதன் ஓர் அங்கமாகவே பார்க்கவேண்டியுள்ளது – என்றுள்ளது.

# சம்பிக்க ரணவக்கவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 20

கொழும்பு குற்றப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் விளக்கமறியல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை நீடித்து கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

2016ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில இடம்பெற்ற விபத்து ஒன்று தொடர்பாக, சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலின் படி, நேற்று முன்தினம் முன்னிரவு சம்பிக்க ரணவக்கவை அவரது இல்லத்தில் கொழும்பு குற்றப் பிரிவுப் பொலிஸார் கைது செய்தனர்.

அவரைக் கைது செய்து வெளியே கொண்டு செல்லும்போது, தகவல் அறிந்து வீட்டின் முன்பாகக் குவிந்த அவரது ஆதரவாளர்களும் ஐ.தே.கவினரும் பொலிஸாருக்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

கொழும்பு குற்றப் பிரிவுத் தலைமையகத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட சம்பிக்க ரணவக்க பின்னர், கொழும்பு நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

அப்போது, நேற்றுக் காலை வரை அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் அவர் நேற்று நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால் அவரது விளக்கமறியலை நீடிக்க மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது. அதனை ஏற்ற மன்று சம்பிக்க ரணவக்கவின் விளக்கமறியலை எதிர்வரும் 24ஆம் திகதிவரை நீடித்து உத்தரவிட்டது.

இதேவேளை, கொழும்பு குற்றப் பிரிவில் சம்பிக்க தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் அமைச்சர்கள் ஹர்டி சில்வா, ஏரான் விக்ரமரத்ன, அசோக அபேசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் உள்ளிட்டவர்கள் அங்கு வந்து அவருடன் உரையாடி ஆதரவு தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பின்னர், சம்பிக்க ரணவக்கவின் இல்லத்துக்குச் சென்று முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் ஆறுதல் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு ராஜகிரிய பகுதியில் சம்பிக்க ரணவக்கவின் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் காயமடைந்தார்.

இந்த விபத்து இடம்பெற்றபோது, சம்பிக்க ரணவக்கவே வாகனத்தைச் செலுத்தினார் என்றும், பின்னர் வாகனத்தைவிட்டு இறங்கிச் சாரதியே செலுத்திச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் எனப்பொலிஸாருக்கு கூறினார் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இந்துமதம்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்படிக் கடைப்பிடிப்பதற்கு இந்து மதம் எந்தத் தடையும் போடவில்லை. கடைப்பிடிப்பவர்கள் யாவரும் இந்து நெறிப்படி வாழ்பவர்கள் என்றுதான் எடுத்துக் கொள்ளும் பரந்த நோக்கே இந்துமதம் இன்னும் வாழும் நெறியாக இருப்பதற்குக் காரணம் எனலாம்.

அவசர கதியில் இன்று உலகம் இயங் கிக் கொண்டிருக்கிறது.மக்களும் அதன் வழியிலேயே ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.இதனால் அவர்களிடம் அமைதி இல்லை. ஆனந்தம் ஓடி விடுகிறது. எதற் கும் பதற்றமும் படபடப்பும். இராட்சத வாழ்க்கைதான் அவர்களிடம் குடிபுகுந்து விட்டது. இதற்குக் காரணம் நாகரிகம் என்னும் உருவத்தில் உள்புகுந்த தீராத தலைவலியே எனலாம்.

வாழ்கை முறை மாறிவிட்டது.மனிதர்களின் சமூக அமைப்பே மாறிவிட்டது. இந்த நிலை நீடிக்கக் கூடாது எனப் பல பெரியவர்கள் கூக்குரல் எழுப்புகிறார்கள்.ஆனால் அவையும் எடுபடுவனவாக இல்லை.

நவீன நாகரிகத்தினை உயர்வெனக் கருதியவர்கள் மத்தியிலேயே ஒரு விழிப்புணர்ச்சி ஆரம்பித்திருக்கிறது. அதாவது – இந்துமத நெறிகளின்படி வாழ்வதுதான் சிறந்தது என்னும் சிந்தனையா கும். மொழி கடந்து, நாடு கடந்து, இனம் கடந்து இந்த எழுச்சி வந்திருக்கிறது. அதற்கு அடிப்படை இந்து மதத்தின் சாத்வீகமாகும்,

இந்துமதம் என்பது உலகினுக்கு நல்ல வாழும் நெறியைக் காட்டி நிற்கிறது. எவரையும் நோகடிக்காமல் அன்பினால் கட்டியணைக்கும் தத்துவத்தை இந்து மத நெறி வழங்கி நிற்கிறது. மதம் பிடிக்கும் மனித இனத்தை மீட்க வேண் டும் என்பதுதான் இந்துமதத்தின் முக்கிய குறிக்கோளாகும். எந்த மதத்தாரையும் அரவணைக்கும் உயரியபாங்கினை இந்துமதம்தன்னுள்ளே கொண்டிருக் கிறது. நல்லவற்றை வாழ்க்கை ஆக்கிக் கொள்ளுங்கள் என்று சாத்வீகமாக அனைவருக்கும் வழங்கும் நெறியினை இந்துமதம் நெறியாக்கி வைத்திருப்ப தனால் அது ஒரு சிறந்த வாழும் நெறி யாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.

# மணற்கொள்ளையர்களால் குடாநாடு தனித் தீவாகும்!

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 20

புதிய அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே மணல் ஏற்றிச் செல்லும் வழித்தட அனுமதியை நீக்கியிருப்பதால் வடக்கில் மணற்கொள்ளை விஸ்வரூபம் பெற்றுள்ளது. இதனால், சுற்றுச்சூழலில் பாரிய சீர்குலைவு ஏற்பட இருப்பதோடு யாழ் குடாநாடு தனித் தீவாகும் அபாயமும் அதிகரித்துள்ளது எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாணத்தின் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

அதிகரித்திருக்கும் சட்டவிரோத மணல் அகழ்வைக் கண்டித்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பூமி வெப்பமடைதல் காரணமாகக் கடல் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாடு பல கடல் நீரேரிகளைக்கொண்டுள்ளதால்குடாநாட்டுக்குள் கடல்நீர் புகும் அபாயம் இருப்பதாகவும் இதனால், ஆனையிறவுப் பகுதியில் துண்டிக்கப்பட்டு குடாநாடு தனித்தீவாகும் எனவும் சுழலியலாளர்கள் ஏற்கனவே எச்சரித்திருக்கிறார்கள்.

இந்நிலையில் இப்போது, நான் முந்தி, நீ முந்தி என்று மணல் மாபியாக்களால் மணற்கொள்ளை கட்டுப்பாடற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதால் கடல் நீர் உட்புகுந்து யாழ் குடாநாடு தனித்தீவாகும் அபாயம் மேலும் அதிகரித்திருக்கிறது.



மணல் அபிவிருத்திக்குத் தேவையான வளம் மாத்திரம் அல்ல நிலத்தடியில் நன்னீரைத் தக்கவைப்பதிலும் மணல் பெரும் செல்வாக்கைச் செலுத்துகிறது. மணல் மேடுகள் குறையக் குறைய நிலத்தடி நன்னீரின் அளவும் குறைந்து அவ்விடத்தைக் கடல்நீர் ஆக்கிரமிக்கின்றது. போரில் ஏற்கனவே பெரும் பாதிப்பைச் சந்தித்திருந்த எமக்கு மணல் ஏற்றும் வாகனங்களுக்கான அனுமதித் தடை நீக்கம் இப்படிப் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவுள்ளது.

அரசு உடனடியாக மீளவும் மணல் ஏற்றுகின்ற வாகனங்களுக்கான அனுமதியைக் கட்டாயமாக்குவதோடு சட்டவிரோத மணல் அகழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். தவறும் பட்சத்தில் மணற்கொள்ளைக்கு எதிரான போராட்டம் விரைவில் மாகாணம் தழுவிய அளவில் விரிவுபடுத்தப்படும் – என்றார். (ஐ)

## பிரதமர் மஹிந்தவுடன் இந்தியத் தூதர் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 20

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை, கொழும்புக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது, கடந்த மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர், பரஸ்பர ஒத்துழைப்பு குறித்த பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப் பட்டதாகப் பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# குத்துக் கரணம் அடித்தனர் வெள்ளை வான் சாரதிகள்

## ராஜிதவுக்கு எதிராக வாக்குமூலம்

கொழும்பு, டிசெ. 20

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கோரியதன்படியே, வெள்ளை வான் கடத்தல்கள் பற்றிச் செய்தியாளர் சந்திப்பில் கருத்துக்களைத் தாங்கள் வெளிப்படுத்தினர் எனக் கைது செய்யப்பட்ட இரண்டு சந் தேக நபர்களும் வாக்குமூலம் அளித்துள்ளனர் என்று குற்ற விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், ராஜித சேனாரத்ன ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் தோன்றிய வெள்ளை வான் சாரதி மற்றும் சாட்சி என்று கூறப்பட்ட இரண்டு பேர், குற்ற விசாரணைத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் குற்ற விசாரணைத் திணைக்களம் கொழும்பு பிரதம நீதிவானுக்கு அளித்துள்ள அறிக்கையிலேயே, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கோரியதன்படியே, வெள்ளை வான் கடத்தல்கள் பற்றி செய்தியாளர் சந்திப்பில் வெளிப் படுத்தினர் எனக் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் வாக்கு மூலம் அளித்துள்ளனர்எனக்கூறியுள்ளது.

ராஜித சேனாரத்ன கோரியபடியே, விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயம் தொடர்பாகச் செய்தியாளர் சந்திப் பின்போது, பொய்யான தகவல்களை அளித்தனர் எனச் சந்தேக நபர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் குற்ற விசாரணைத் திணைக் களத்தினர் நீதிமன்றத்துக்கு தெரிவித் துள்ளனர்.



இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற 30 இலட்சம் ரூபாவை தாங்கள் கோரினர் எனவும், அமெரிக்க அல்லது இங்கிலாந்துத் தூதரகத்தில் வேலையும், இரண்டு வீடுகளும் வழங்க ராஜித சேனாரத்ன ஒப்புக் கொண்டமையை அடுத்து, 20 லட்சம் ரூபாவாக அதனைக் குறைக்க இணங்கியதாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர் எனக் குற்ற விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ராஜித சேனாரத்ன எழுதிக்கொடுத்ததையே தாங்கள் கூறினர் என்றும், அங்கு கூறியதில் எந்த உண்மையும் இல்லை என்றும் அவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர் எனவும் சி.ஐ.டி. மேலும் கூறியுள் ளது.

பணம் கொடுப்பதாக ராஜித சேனாரத்ன ஒப்புக் கொண்டதன் பின்னரே தாங்கள் செய்தியாளர் சந்திப்புக்கு இணங்கினர் எனவும் அவர்கள் கூறினார்கள் என்று நீதிவானிடம் குற்ற விசாரணைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு



வவுனியா, டிசெ. 20

வவுனியா உளுக்குளம் பகுதியில் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை குளத்துக்கு மீன் பிடிக்கச் சென்ற 57 வயதுடைய ஜி.விஜயசிறி என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

மீன்பிடிப்பதற்குச் சென்ற விஜயசிறி நீண்ட நேரமாக வீடு திரும்பாத நிலையில் ஊர்மக்கள் அவரை தேடிச் சென்றுள்ளனர்.

இதன்போது உளுக்குளம் குளத்தினுள் மிதந்த நிலையில் சடலம் காணப்பட்டதையடுத்து, பொலிஸாரால் அது மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான மருத்துவ அறிக்கை துரிதமாகிறது

## அங்கஜன் எம்.பி. நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம், டிசெ. 20

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான மருத்துவ அறிக்கை பெறுவதில் உள்ள நெருக்கடிகளைத் தீர்க்க நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் துரித நடவடிக்கை முன்னெடுத்துள்ளார்.

மருத்துவச் சான்றிதழ் வழங்கும் இடத்துக்கு நேற்றுக் காலை சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், அங்கு நிலைமைகளை நேரில் அவதானித்த மையுடன், மருத்துவச் சான்றிதழ் வழங்குவதைச் சுலபமாக்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது –

இதுவரை காலமும் மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்குப் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர். அது குறித்து எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனடிப்படையில் நேற்றுக் காலை மருத்துவச் சான்றிதழ் வழங்கும் இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளேன்.

என்னுடன் திணைக்கள அதிகாரிகளும் இணைந்து மருத்துவச் சான்றிதழ் வழங்கும் பரீட்சார்த்த நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

இந்த நடவடிக்கையை யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு மேற்கொள்ளவுள்ளது.

இதனை தொடர்ந்து மருத்துவச் சான்றிதழ் பெறுபவர்கள் வரிசையில் நிற்கவேண்டியதில்லை.

மருத்துவச் சான்றிதழ் தேவையானவர்கள் அதற்கான விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம், அதில் திகதியிட்டுக் கொடுக்கப்படும் அந்தத் திகதியில் வந்து மருத்துவச் சான்றிதழை பெறுவதற்கான சோதனைகளை மேற்கொண்டு குறுகிய நேரத்தில் மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை யாழ்ப்பாணத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான மருத்துவ அறிக்கையை வழங்குவதற்கு மருத்துவர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள், மருத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்களைப் புதிதாக நியமனம் செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவுள்ளோம். இதன் மூலம் நடைமுறை மேலும் இலகுவாக்கப்படும் –என்றார். (ஐ)